மாலை: 52 மே 2010 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு



# தமிழ் மாநாட்டுக் கவிதை
## மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்

கடல்கோள்களை எதிர்கொண்டும் கால வெள்ளத்தைக் கடந்தும் சீரிளமைத் திறத்தோடு திகழும் தமிழ்மொழிக்கு 'செம்மொழி' எனும் சிறப்புத் தகுதியினைப் பெற்றுத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழறிஞர், டாக்டர் கலைஞர் அவர்கள்–தரணியே புகழ்ந்தேற்றும் வண்ணம்–கொங்கு மண்டலமாம் கோவை மாநகரில் ஜூன் 23 அன்று தொடங்கி ஜூன் 27 வரை 'உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை' நடத்திட நாளும் ஆற்றிவரும் அளப்பரிய பணிகளைத் தமிழ்கூறு நல்லுலகினர் யாவரும் அறிவோம்!

இம்மகத்தான மாநாட்டின் மைய நோக்கத்தினை வையகமே அறிந்து கொள்ளும் வகையில்–தாமே தீந்தமிழ்க் கவிதையொன்றினையும் தீட்டியுள்ளார், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்!

ஆம்! ஆட்சியை நடத்துபவரே அருந்தமிழ்க் காவியம் தீட்டுபவராகவும் வாய்த்திடும் பெரும்பேறு பெற்றது தமிழகம்தானே!

கருத்தாழமும் கவிநயமும்மிக்க – கற்கண்டு சுவைப் பாடலுக்கு உலகப்பெரும் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்து பாடலுக்கு மேலும் பெருமை சேர்க்கிறார்.

அன்னைத் தமிழ்க் காவலர்–முதல்வர் கலைஞர் அவர்கள் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் மைய நோக்கத்தினை விளக்கி இயற்றியுள்ள பாடலை பேருவகையுடனும் பெருமிதத்துடனும் வெளியிட்டு மகிழ்கிறோம்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
பிறந்த பின்னர், யாதும் ஊரே, யாவரும் கேளிர்!

உண்பது நாழி உடுப்பது இரண்டே
உறைவிடம் என்பது ஒன்றேயென
உரைத்து வாழ்ந்தோம் உழைத்து வாழ்வோம்


தீதும் நன்றும் பிறர் தர வாரா எனும்
நன் மொழியே நம் பொன் மொழியாம்!

போரைப் புறம் தள்ளி
பொருளைப் பொதுவாக்கவே
அமைதி வழி காட்டும்
அன்பு மொழி
அய்யன் வள்ளுவரின் வாய்மொழியாம்!

ஓரறிவு முதல் ஆறறிவு உயிரினம் வரையிலே
உணர்ந்திடும் உடலமைப்பை பகுத்துக் கூறும்
ஒல்காப் புகழ் தொல்காப்பியமும்
ஒப்பற்ற குறள் கூறும் உயர் பண்பாடு
ஒலிக்கின்ற சிலம்பும், மேகலையும்
சிந்தாமணியுடனே வளையாபதி குண்டலகேசியும்
செம்மொழியான நம் தமிழ் மொழியாம்!

அகமென்றும் புறமென்றும் வாழ்வை
அழகாக வகுத்தளித்து
ஆதி அந்தமிலாது இருக்கின்ற இனிய மொழி-
ஓதி வளரும் உயிரான உலகமொழி-
நம் மொழி- நம் மொழி- அதுவே
செம்மொழி செம்மொழி நம் தமிழ் மொழியாம்!
வாழிய வாழியவே! வாழிய வாழியவே! வாழிய வாழியவே!





திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு: 2041 வைகாசி மாதம்
மாலை52. மணி 5 மே 2010

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!
வணக்கம்.

இளவேனில் கால வைகாசித் திங்களில், நம் தமிழ்க் கடவுள் முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள திருத்தலங்கள் தோறும், வைகாசி விசாகத்தைக் கடைநாளாகக் கொண்டு பெருந் திருவிழாக்கள் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. முருகப் பெருமான் ஆறு திருமுகங்களுடன் திரு அவதாரம் செய்தது வைகாசி விசாகத்திலாகும். அதையொட்டியே விசாகன், விசாகப் பெருமான் என்று அவர் அழைக்கப்படுகிறார்.

மேலும் ஞானப் பேரொளியான புத்த பகவான் அவதாரம் செய்தது, ஞானம் பெற்றது, மகா நிர்வாண (முத்தி) நிலை எய்தியது ஆகிய மூன்று நிகழ்வுகளுமே வைகாசி பௌர்ணமியில்தான் நிகழ்ந்தன. இந்நாளை 'புத்த பூர்ணிமா' என்றும் அழைப்பர்.

இவ்விதழில் வெளியாகியுள்ள 'சான்றோர் சிந்தனை' எனும் புதிய பகுதியில், இருபதாம் நூற்றாண்டின் சமய சமுதாய ஞானியாகப் பாராட்டப்பெற்ற, மறைந்த தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் 'தமிழ் அருச்சனை' எனும் கட்டுரை வெளியாகியுள்ளது. தாய் மொழியில் வழிபாடு குறித்து, அவர் கூறியிருக்கும் கருத்துகள் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கனவாகும்.

பேராசிரியர் அரங்க இராமலிங்கம், அய்யன் திருவள்ளுவரின் மெய்யுணர்தல் அதிகாரத்தை சித்தர் நெறியில் புதிய கோணத்தில் சிந்தித்துக் கட்டுரையாகப் படைத்துள்ளார். பேராசிரியர் அருணை பாலறாவாயன் அவர்களின் ஆலய விளக்கம் எனும் கட்டுரையும் பொருட் செறிவுடன் புதிய விளக்கங்களுடன் வெளிவந்துள்ளது.

திருமுல்லைவாயில் தலச்சிறப்பு குறித்த பூசை.ச.ஆட்சிலிங்கம் அவர்களின் கட்டுரையும், ஆரணி சம்பங்கி பிச்சாண்டீசுவரர் திருக்கோயில் குறித்த பனையபுரம் அதியமான் அவர்களின் கட்டுரையும், பக்தர்களுக்கு ஆலய தரிசனத்திற்கு பெரிதும் உதவும்.

'நீதிக் கதைகள்' எனும் புதிய பகுதியில் திரு.தென்கச்சி கோ.சுவாமிநாதன் அவர்களின் 'எதுவும் நடக்கலாம்' எனும் கதை வெளியாகி உள்ளது. படிப்போரைச் சிந்திக்க வைக்கும். மேலும் பல அறிஞர் பெருமக்களின் கட்டுரைகளும் இவ்விதழில் வெளியாகியுள்ளன.

திரு.தென்னம்பட்டு ஏகாம்பரம் அவர்கள் 'திருக்கோயில்' இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்றுள்ளார். நீண்ட காலத்து எழுத்தாளரான அவர் சிறந்த மரபுக் கவிஞர்; உரைநடைஆசிரியர்; பத்திரிக்கையாளர்.


திருக்கோயில் இதழை முன்னைப் பழமை நெறி போற்றியும், புதிய நெறியைப் புகுத்தியும் சிறப்பாக நடத்துவார் என நம்புகிறேன்.

வாசகப் பெருமக்கள் தொடர்ந்து நல்ஆதரவினை வழங்கிட அன்புடன் வேண்டுகிறேன்.

ப.ரா. சம்பத்

இந்து சமய அறநிலையத் துறை
119. உத்தமர் காந்தி சாலை,
சென்னை – 600 034.

(ப.ரா. சம்பத், இ.ஆ.ப.,)
ஆணையர்



# குறளோவியம்

''மலைவாழை அல்லவோ கல்வி
நீ வாயார உண்ணுவாய் போ என் புதல்வி''

பாவேந்தர் என்றும், புரட்சிக் கவிஞர் என்றும், செந்தமிழ்ச் செல்வம் என்றும், இருபதாம் நூற்றாண்டின் எழுச்சிப் புலவன் என்றும் ஏற்றிப் போற்றிடும் பாரதிதாசனின் தென்றல் நடைத் தீஞ்சுவைக் கவிதை பாடிக் கல்விக் கூடத்திற்குத் தன் மகளை அனுப்பிவைத்தாள் அன்னை!

"தலைவாரிப் பூச்சூடி உன்னை
பாடசாலைக்குப் போ என்று
சொன்னாள் உன் அன்னை"

தாய்மொழி கேட்டுத் தாய்மொழித் திறன்பெற மகளும் சென்றாள். ஊக்கமுடன் பயின்றாள். உலகத்து அறிவுக் கருவூலங்களையெல்லாம் அவள் நெஞ்சத்துப் பேழையில் அள்ளிப் போட்டுக்கொண்டாள்.

இளந்தளிராய்– குளிர் பிறையாய்– இனியவளும் வளர்ந்தாள்! இதழ்கள் செங்கனிகளாயின! பொன்னுருக்கில் தோய்த்தெடுத்த சிலைதான் மேனி! அவளைக் காணும் ஆடவர் கண்ணின் இமைகள் மீண்டும் மூடிக்கொள்ள மறந்தேவிட்டன! போற்றிப் புகழத் திறந்த வாய்கள், திறந்தே இருந்தன! கருவண்டு சுழன்று சுழன்று நடனமாடும் வெள்ளியம்பலந்தான் அவள் விழிகள்! அந்தத் தாமரையை ஈன்றெடுத்த அவள் தாய் ஒரு நாள் அந்தத் தங்க மகளை அருகழைத்து அமரவைத்து அவள் எதிர்கால வாழ்வுக்கான தேர்வு ஒன்றை நடத்தினாள்.

"என்னருமை மகளே! உனக்குத் திருமண விழா நடத்திப் பார்க்க நானும் உன் தந்தையும் முடிவு செய்துள்ளோம். உன் அழகிற்கு அடிமையாக எத்தனையோ செல்வந்தர் வீட்டுப் பிள்ளைகள் தூது விட்டுக் கொண்டிருக்கின்றனர்! அரச வம்சத்து இளவல்கள் பலரும் ஆள் அனுப்புகின்றனர்! உன் விருப்பம் தெரியாமல் நாங்கள் ஒப்புதல் அளிக்க இயலுமா? இதோ பார்; அவர்களின் உருவ ஓவியங்களை!"

அந்த மாணிக்கவல்லியை மணக்க விழைந்த ஆடவர்களின் உருவங்களை ஒவ்வொன்றாக எடுத்து அவள் முன்வைத்தாள்.

"அம்மா! தலையில் வைரமுடியும் கழுத்தில் முத்தாரமும் அணிந்து காணப்படும் இவர் யாரம்மா?"

"ஓ! என் மகளே! நீ எடுத்த எடுப்பிலேயே உயர்வாகத்தான் எண்ணுகிறாய்! இவர்தான் இளவரசர் இளநாகர்! ஏழு ஊர்களுக்கும் எட்டு மலைகளுக்கும் உரிமையுடையவர்!"

"அப்படியா? இதோ கூரிய பார்வையும் கொடிய தோற்றமும் கொண்டு நிற்கிறாரே; இவர் யார்?"

"இவரா? வல்லமையிலும் சிறந்தவர்! வளத்திலும் பெரியவர்! அழகு குறைவே ஆயினும் அள்ள அள்ளக் குறையாத செல்வம் உடையவர்!"


"அம்மா! இவர்களில் யாரையும் நான் மணக்க விரும்பவில்லை! வளமுடையவர்! வல்லமையுடையவர்! அழகுடையவர்! அறிவுடையவர்! அதிகாரம் செலுத்தும் சிறப்பும் உடையவர்! இப்படி ஒவ்வொருவர் படங்களாக நீங்கள் என்னிடம் காட்டிடக் காத்திருக்கிறீர்கள்; இல்லையா?"

"ஆமாம் மகளே! இவர்களில் யாரை நீ உயர்ந்தவராகக் கருதுகிறாயோ அவரை மணந்திட நாங்கள் ஏற்பாடு செய்கிறோம்!"

"அம்மா! உயர்ந்தவரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமோ?"

"ஆம் கண்ணே! எண்ணுவதையெல்லாம் உயர்வாகவே எண்ண வேண்டும்; என்று

வள்ளுவர்கூடக் குறள் பாடியிருக்கிறாரே– நீ படித்திருப்பாயே!"



"படித்திருக்கிறேன் அம்மா! ஆனால் உயர்வு என்பது உப்பரிகையிலே உலவிடும் அளவுக்குப் பெருமையும்– மாடமாளிகைகளில் வாழ்ந்திடும் அளவுக்குச் சிறப்பும் கொண்டது என்று இலக்கணம் வகுத்து விடாதீர்கள்! நான் இந்த உயர்வுகளை, 'உயர்வுகள்' என்ற பட்டியலிலேயே இணைத்துப் பார்க்கவில்லை!"

"என்னம்மா சொல்லுகிறாய்? அழகின் திருவுருவமான உன்னை அடைந்திட எத்தனை பேர் தவம் இருக்கிறார்கள்! நீ இவர்களையெல்லாம் விட்டுவிட்டு யாரைத்தான் மணக்க விரும்புகிறாய்?"

"அம்மா! எண்ணுவதெல்லாம் உயர்வான எண்ணமாக இருக்க வேண்டுமல்லவா? அதன்படிச் சொல்லுகிறேன்; அன்னைத் தமிழ் மொழி காத்திடும் போராட்டத்தில் ஈடுபட்டு, ஒரு கையை இழந்து–இன்னமும் சிறையில் பூட்டப்பட்டுக் கிடக்கிறாரே; 'அரிமா' என்னும் தியாகத் தமிழன்; அவருக்காகவே நான் காத்திருக்கிறேன்."

"என்ன? அவனுக்கா? அந்தக் கையிழந்த சிறைப்பறவைக்கா? இதுதான் நீ மிக உயர்வாக எண்ணிய அழகோ? உன் எண்ணம் ஈடேறவே முடியாது; ஈடேறப் போவதுமில்லை!"

"தாயே! தயவு செய்து என்னை மன்னித்திடுக! வள்ளுவர் குறளின் அடுத்த அடியை மறந்துவிடலாமா? எண்ணுவ தெல்லாம் உயர்வைப்பற்றியே எண்ண வேண்டும்! அந்த உயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதைவிடக் கூடாது! என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறாரே!"

தாய் கவலையே உருவாகக் கன்னத்தில் கைவைத்தவாறு உட்கார்ந்திருந்தாள். அந்தக் கன்னியோ, எழுந்து வந்து பலகணி வழியாகப் பரந்த விண்வெளியைப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

**"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து."**


**அதிகாரம்:60 ஊக்கம் உடைமை பாடல்:596**

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.

## இதழின் உள்ளே..

முகப்பு: சென்னை திருவான்மியூர் அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில்


| | | |
|---|---|---|
| 1. தமிழ் அருச்சனை | தவத்திரு குன்றக்குடி அடிகளார் | 6 |
| 2. இடர்களையும் எந்தை உறையுமிடம் திருமுல்லைவாயில் | பூசை.ச.ஆட்சிலிங்கம் | 8 |
| 3. திருமுறை அமுதம் தேடிய வள்ளலார் | முனைவர்.த.சோமசுந்தரம் | 13 |
| 4. ஆரணி சம்பங்கி பிச்சாண்டீஸ்வரர் | பனையபுரம் அதியமான் | 17 |
| 5. மெய்யுணர்தல் | முனைவர்.அரங்க.இராமலிங்கம் | 21 |
| 6. ஆலய விளக்கம் | முனைவர்.அருணை பாலறாவாயன் | 25 |
| 7. உலகம் உய்ய உதித்த உடையவர் | பெ.ராமநாதபிள்ளை | 29 |
| 8. எதுவும் நடக்கலாம்! | தென்கச்சி கோ.சுவாமிநாதன் | 32 |
| 9. புளியமர பொந்தினில் வாழ்ந்த புனிதர் | எம்.என். சீனிவாசன் | 34 |
| 10. மெய்ஞ்ஞானம் | தென்னம்பட்டு ஏகாம்பரம் | 37 |



அருள்மிகு வள்ளிதெய்வயானை உடனாய முத்துக்குமார சுவாமி
அருள்மிகு கந்தசாமி திருக்கோயில், கந்தகோட்டம், பூங்காநகர்,
சென்னை-600 003

பிரார்த்தனை

# திருவருட்பிரகாச வள்ளலார் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள்

## திருவருட்பா

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவுவேண்டும்

உள்ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்

பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்கவேண்டும்

பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்
பிடியா திருக்கவேண்டும்

மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும்உனை
மறவா திருக்கவேண்டும்

மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழவேண்டும்

தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே

தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.



சான்றோர் சிந்தனை

# தமிழ் அருச்சனை

-தவத்திரு குன்றக்குடி அடிகளார்

சமயச் சீர்திருத்தங்களுள் ஒன்று தாய் மொழியில் அருச்சனை என்பது. பொதுவாக அருச்சனை முறையே ஒருவருக்காக மற்றொருவர் செய்யும் முறை தோன்றிய பொழுது செல்வாக்குப் பெற்ற ஒன்று. அஃது அவ்வளவு சிறப்புடையதன்று. இறைவனை மலரிட்டுப் போற்றித் துதித்து வழிபடுதல்தான் நம்முடைய வழிபாட்டு முறை. தேவாரத் திருமுறைகளில் தற்கால அருச்சனை முறை இருந்ததில்லை. சங்ககால இலக்கியங்களிலும் இல்லை. அருச்சனை என்ற சொல்லும் வடமொழிச் சொல்லே. சேக்கிழார் 'அருச்சனை' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார். ஆனால் அவர் குறிப்பிடுவது இன்றுள்ள அருச்சனை முறையயன்று. "அருச்சனை பாட்டேயாகும்" என்பது சேக்கிழார் வாக்கு. "பாட்டேயாகும்" என்ற சொல்லில் உள்ள தேற்றேகாரம் எண்ணத்தக்கது. சுந்தரர் காலத்தில் இன்றுள்ள அருச்சனை முறை பெருவழக்காக வந்திருக்க வேண்டும். இது அருச்சனை முறையன்று. நீ பாடிப் பரவுதலே அருச்சனையென்று பெருமான் சுந்தரருக்கு ஆணையிடுகின்றார்.

"அருச்சனை பாட்டே ஆகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக............"

என்பதுதான் தூமறை பாடும் வாயனாகிய பெருமானின் கட்டளை. ஆதலால் தேவாரத் திருமுறைகளைப் பாடித் துதித்தல் சிறந்த வழிபாட்டுமுறை. ஆயினும் இன்று கால் கொண்டுள்ள அருச்சனைமுறை அவ்வளவு எளிதில் போகாது; அது மட்டுமன்றி, விரும்புபவர்களுக்கும் இயலாதவர்களுக்கும் இந்த முறை இருப்பதனால் ஓரளவு பயனுண்டு. இந்த அருச்சனை முறை தாய் மொழியில் அமைய வேண்டும்.



சமய நெறிகளுக்கு – பிரார்த்தனைக்கு மொழி எல்லை ஏன்? இசுலாமியர் எந்த மொழியினத்தைச் சேர்ந்திருந்தாலும் அராபிய மொழியில்தானே பிரார்த்தனை செய்கிறார்கள். ஆம்! அஃது உண்மையே. இசுலாமிய சமயம் அராபிய மொழிவழிப்பட்ட சமுதாயத்தில் தோன்றிற்று. பிற மொழி வழிப்பட்ட இனங்களிலும் அது பரவியது. ஆதலால் இசுலாமியர் தமது சமயம் தோன்றிய மொழியையே விரும்பி மேற்கொண்டிருக்கின்றனர். அப்படி விரும்பி மேற்கொள்வது மரபுவழி வழக்கமுமாகிவிட்டது; அதற்குத் தடையுமில்லை.

நம்முடைய சமயம் நம்முடைய தாய்மொழியில் தோன்றி வளர்ந்ததே தவிரப் பிறமொழியில் தோன்றி வளர்ந்ததில்லை. சேக்கிழார் "தமிழ் வழக்கு" என்றே நமது சமயத்தைக் குறிப்பிடுகின்றார். ஆதலால் நம்முடைய சமயம் தோன்றி வளர்ந்த முறையிலேயே நமது பிரார்த்தனை மொழி இருப்பதுதான் நியாயம். மேலும், இன்று அருச்சனை மொழியாக இருக்கும் சமஸ்கிருதம், நமது சமய மொழியாக இருந்திருக்கு மானால் அதைஎல்லோரும் கற்றுத் தெளிவதற்குரிய வாய்ப்பு வழங்கப் பட்டிருக்க வேண்டும். அங்ஙனம் வழங்கப் படாததோடு மட்டுமன்றித்

தடையும் விதிக்கப்பட்டு வந்திருக்கிறது. இடையில் வந்த மொழி ஆதிக்கமும், சாதி ஆதிக்கமுமே நம்முடைய சமயம் உலகச் சமயமாவதைத் தடுத்து விட்டன.

அதுபோல, கிறித்தவ சமயம் லத்தீன் மொழியில் தோன்றிவளர்ந்தது. கிறித்தவர்கள் லத்தீன் மொழியில் பிரார்த்திக்கின்றனர். அங்கே லத்தீன் மொழியைப் பயில எல்லோருக்கும் வாய்ப்புண்டு; தடையில்லை. ஆனாலும் மார்ட்டின் லூதர் தோற்றத்திற்குப் பிறகு கிறித்தவ சமயம் பரவியிருக்கும் நாடுகளில் அவரவர் மொழியில் வழிபாடு செய்யும் பழக்கம் வந்துவிட்டது.

தாய்மொழியில் அருச்சனை என்ற இயக்கம் மொழி வழிப்பட்ட இயக்கமன்று. பிரார்த்தனை, பக்தி என்பன உயிரின் வளர்ச்சிக்குத் துணை செய்வன. உயிரின் வளர்ச்சி நெஞ்சத்துடன் தொடர்புடையது. ஆதலால் நெஞ்சினைத் தொட்டு உணர்வினைத் தூண்டும் மொழிதான் வழிபாட்டு மொழியாக அமைதல் வேண்டும். அந்த வாய்ப்புத் தாய்மொழிக்கே மிகுதியும் உண்டு. இது பொதுவான கொள்கை.

நமது நாட்டில் தமிழில் வழிபாடு என்று கேட்கும் கோரிக்கை பொது வகையால் மட்டுமன்று; உரிமை வகையினாலும் எழுந்தது. உலக மொழிகளிலே பக்திக்குரிய மொழி தமிழ்தான் என்பது அறிஞர் முடிபு. பக்திக்குரிய அருமையும் எளிமையும் தமிழுக்கு இயல்பாகவே உண்டு. தமிழ், வழிபாட்டு மொழியாகவே வளர்ந்து வந்துள்ள மொழி. அது மட்டுமன்று. மந்திரங்களுக்கு மொழி வரையறையில்லை. நிறைமொழி மாந்தர் அருளிச் செய்பவை மந்திரங்கள்.

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப

என்று தொல்காப்பியம் கூறுகிறது. இதற்கு உரைகண்ட நச்சினார்க்கினியர், "தானே என்று பிரித்தார், இவை தமிழ் மந்திரமென்றற்கு" என்று எழுதுகின்றார். மாதவச் சிவஞான முனிவர் சமஸ்கிருதத்தின் பாலும் மிகப்பற்றுடையவர்; சமஸ்கிருதம் தேவமொழி என்ற கருத்துடையவரே.

ஆயினும் தாம் இயற்றிய காஞ்சிப் புராணத்தில் இறைவனை அகத்தியர் பூசித்த பொழுது தமிழ் மந்திரங்கள் கூறிப் பூசித்ததாகக் கூறுகிறார்.

மன்னியஇத் தமிழ்கிளவி
மந்திரங்கள் கணித்தடியேன்
செந்நெறியின் வழுவாஇத்
திருக்காஞ்சி நகர்வரைப்பின்
உன்னணுக்க னாகிஇனி
துறைந்திடவும் பெறவேண்டும்
இன்னவரம் எனக் கருளாய்
எம்பெருமான் என்றிரந்தான்

என்பது காஞ்சிப்புராணப் பாடல்.

........எனதுரை தனதுரையாக
நீறணிந்தேறுகந் தேறிய நிமலன்.......

என்பது திருஞானசம்பந்தர் வாக்கு. திருமுறைப் பாடல்கள் ஆற்றல் மிக்க மந்திரங்களாக ஐந்தொழில்களையும் நிகழ்த்தியுள்ளன.

ஆதலால், தமிழில் வழிபாடு என்பது வரலாற்றடிப்படையிலும் நியாயமானது; உளவியலடிப்படையிலும் நியாயமானது. மரபு வழியிலும் அது நமது பிறப்புரிமை. நமது திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு நிகழ்த்தும் முயற்சிக்கு நமது தமிழக அரசு அளித்துவரும் ஆதரவு பாராட்டுதலுக்குரியது, ஆனால், அரசு முறையில் இயக்கப் படும்பொழுது தமிழ் வழிபாட்டுமுறையை விரும்பாதார் வழக்கு மன்றங்களுக்குச் செல்லலாம்., அதனால் தடைகள் ஏற்படலாம், ஆனால், தமிழ் மக்கள் தங்களுடைய உயிரினுமினிய திருமுறைகளால் வழிபாடு நிகழ்த்த வேண்டும்– அருச்சனை செய்யவேண்டுமென்று கிளர்ந்தெழுவதே தமிழ் வழிபாட்டினைப்பெற ஒரே வழி, நமது மக்கள் உயிரனைய பிரச்சினைகளில் அலட்சியம் காட்டுகிறார்கள்.

"ஏனோ தானோ' என்று வாழ்கிறார்கள். இந்த அவல நிலையை மாற்றியமைக்கத் தமிழறிஞர்கள் ஓயாது உழைத்திடுதல் வேண்டும்.

---

***சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு (1990) அடிகளாரின் "நமது நிலையில் சமயம் சமுதாயம்" எனும் நூலிலிருந்து ஒரு பகுதி.***

# இடர்களையும் எந்தை உறையுமிடம் திருமுல்லைவாயில்

பூசை.ச. ஆட்சிலிங்கம்




சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவொற்றியூரில் இருந்த சங்கிலி நாச்சியாரிடம் உன்னை எந்நாளும் பிரியேன் என்று சத்தியம் செய்து கொடுத்து, திருமணம் செய்து கொண்டார். அவர்களது இல்லறவாழ்வு இனிது நடைபெற்றது. நாட்கள் கடந்தன. பங்குனி உத்திர தினம் வந்தது. திருவாரூரில் பங்குனி உத்திர விழா நடைபெறும் காட்சிகள் அவர் மனதில் நிழலாடின. அதைக் காணவிரும்பி அவர் திருவாரூருக்குப் பயணமானார். ஊர் எல்லையைத் தாண்டியதுமே சத்தியத்தை மீறியதால், அவர் கண்கள் ஒளியிழந்தன. என்றாலும் பயணத்தைத் தொடர்ந்தார். கண்களை இழந்தவன் படும் துன்பம் கொஞ்சம் நஞ்சமில்லை. அத்துன்பம் அவரையும் பற்றி வாட்டியது. மனம் சோர்ந்தார். என்றாலும் தளராது சுந்தரர் தம் பயணத்தைத் தொடர்ந்தார்.

அவர் வழிப் பயணத்தில் திருமுல்லைவாயிலுக்கு வந்தார். அங்கிருந்த மாசிலாமணீசுவரா் ஆலயத்திற்குச்

சென்றார். அங்குள்ள பெருமானை மனக்கண்ணால் கண்டார். பாடல் புனைந்தார். இதுநாள் வரை தனக்குத் துணைநின்று பலவகையாலும் உதவிகளைச் செய்து வந்த பெருமான், கண்ணிழந்து வாடி வருந்தும் இவ்வேளையில் எந்த உதவியும் செய்யாமல் அமைதியாக இருப்பதையும், படும் துன்பத்தைக் கண்டும் காணாததுபோல் இருப்பதையும் எண்ணி எண்ணி வருந்தினார். அவரது துன்பமும் இறைவனின் பாரா முகத்தால் வருந்தும் நிலையும் அவர் அருளிய அப்பாடல் தோறும்... வெளிப்பட்டது.



முதற்பாடலில், திருவும் உண்மைப் பொருளும் செல்வமும் உனது திருவடிகளே என்று நான் பற்றி நின்றேன். நீயும் அதை ஆதரித்து அருள்புரிந்தாய். உன் துணை வலிமையால் ஒருவரையும் மதியாது அவர்களை எடுத்தெறிந்து பேசி, கோபம் கொண்டு தடித்த வார்த்தைகளைப் பேசி வந்தேன். இப்போது உன் அருள் என்னை விட்டு விலகி விட்டால் நான் என் செய்ய முடியும். ஏழையேன் படும் துயரைக் களைந்து அருள்புரிக என்றார். பாடல்தோறும் பெருமானின் பெருமைகளைப் பேசி தனது துயரைக் களையும்படி வேண்டினார். சங்கிலி நாச்சியார் முன் செய்த சபதத்திற்காக என்கண்களைப் பறித்துக் கொண்டாய். அடியேன் படும் துயரைக் களைவாய் என்று மன்றாடி வேண்டினார். இறைவன் உடனே அருள் செய்யவில்லை என்றாலும், திருக்கச்சியம் பதியில் இடக்கண்ணையும் பெரும் பொன்னையும், திருவாரூரில் வலக்கண்ணையும் பெருஞ்செல்வத்தையும் அருளினான் என்று வரலாறு கூறுகிறது.

இந்தப் பதிகத்தில்

சொல்லாரும் புகழான்
தொண்டைமான் களிற்றை
சூழ்கொடி முல்லையால் கட்டிட்டு
எல்லையில் இன்பம் அவன் பெற
வெளிப்பட்டு
அருளிய இறைவனே

என்று ஒரு வரலாற்றுச் செய்தியைத் தெரிவிக்கின்றார். இது தலவரலாற்றுச் செய்தியாகும்.

சோழமன்னர் கரிகால் சோழப்பெரு வளத்தான் வேட்டையாட வனத்திற்குச் சென்றான்.அங்கு அழகிய ஒரு பெண் உலவிக் கொண்டிருந்தாள். அவளது அழகு அவனைக் கவர்ந்தது. அவள் தான் நாகலோகத்தில் வாழ்பவள் என்றும் தனக்குப் பிறக்கும் மகனுக்கு அரசுரிமை அளிப்பதாக உறுதியளித்தால் உன்னை மணந்து கொள்வேன் என்றும் கூறினாள். அப்படியே ஆகட்டும் என்று சோழன் வாக்குறுதி அளித்தான்.

அவள், அவனை ஒரு பிலத்தின் வழியே தனது நாகலோகத்திற்கு அழைத்துச் சென்றாள். அங்கு ஆதொண்டை மரத்தின் கீழ் அவர்களது திருமணம் நடைபெற்றது. நெடுநாட்கள் அவர்கள் இன்பவாழ்வு நடத்தினர். சோழமன்னன் அவளிடம் நான் அரசுப்பணிகளைக் கவனிக்க வேண்டும் என்று கூறி விடைகேட்டான். அவள் மன்னனே! நான் உன்னால் கருவுற்றேன். நான் பெறும் மகனை வளர்த்து உம்மிடம் அனுப்புவேன். அவனுக்கு அரசுரிமை அளித்து மன்னனாக்குவாய் என்றாள்.

சோழன் நம் மகனை எப்படி நான் அறிந்து கொள்வது என்று கேட்டான். அவள் அன்பரே நாம் ஆதொண்டைக் கொடி படர்ந்துள்ள இந்த மரத்தின் கீழ்

திருமணம் செய்து கொண்டோம். இந்தக் கொடியைக் கொண்டு செய்த மாலையைச் சூட்டி இவனைத் தங்களிடம் அனுப்பி வைப்பேன். அந்தக் கொண்டு உண்மையை அறிந்து கொள்வாய் என்றாள். மன்னன் அவளிடம் விடைபெற்றுக் கொண்டு தன் நாடு மீண்டான்.

காலங்கள் கழிந்தன. நாகக்கன்னி ஓர் ஆண் பிள்ளையைப் பெற்றாள். அதைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து பெரியவனாக்கினாள். குதிரையேற்றம், வாள்வித்தை, வில்வித்தை முதலிய போர்ப் பயிற்சிகளைப் பயிற்றுவித்து வீரனாக்கினாள். உரிய பருவம் வந்ததும் அவனுடைய தந்தையான சோழமன்னனிடம் அனுப்ப எண்ணினாள்.

ஆதொண்டைக் கொடிகளாலும் மலர்களாலும் புனையப்பட்ட மாலையை அணிவித்து கடல்மீது தோணியில் வைத்து அனுப்பினாள். தோணி சோழநாட்டின் கரையை அடைந்தது. அவனது தோற்றப் பொலிவையும் வரலாற்றையும் அறிந்த மக்கள் அவனை கரிகால் பெருவளத்தானிடம் கொண்டுவந்து சேர்த்தனர்.

அவன் அரசனிடம் தன் வரலாற்றைக் கூறினான். முதலில் கூறியதை நம்ப மறுத்தான். அப்போது ஒரு விண்ணொலி அரசனிடம் பீலிவளையிடம் உனக்குப் பிறந்த மகன் இவனே; இவனுக்கு உனது ஆட்சியில் ஒரு பகுதியை அளிப்பாய் என்றது. அத்துடன் முன்னைய பழங்கதையையும் கூறியது.

அதைக் கேட்டதும் மன்னன் அவனைத் தன் மகனாக ஏற்றுக் கொண்டான். ஆதொண்டை மலர் சூடி வந்ததாலும் கடலின் அலைக் கரத்தால் (திரைகளால்) சோழநாட்டுக்குக் கொண்டு வரப்பட்டதாலும் அவன் தொண்டைமான் இளந்திரையன் என்று அழைக்கப்பட்டான்.

சோழமன்னன் காஞ்சீபுரத்தைச் சுற்றியுள்ள நிலப்பகுதிகளுக்கு அவனை அரசனாக்கினான். அவன் பெயரால் அந்நாடு தொண்டைநாடு எனப்பட்டது. அவன் சிறப்புடன் அந்நாட்டை ஆண்டு வந்தான். சிறந்த சிவபக்தியுடன் ஆலயப் பணிகள் பலவற்றைச் செய்தான்.

அவனுக்கு அடங்கிய சிற்றரசர்கள் பலர் இருந்தனர். அவர்களில் குறும்பர் என்னும் இனத்தவர் வங்கக் கடலோரம் கோட்டை கட்டிக் கொண்டு அரசு நடத்திவந்தனர். அவர்கள் ஒரு சமயம் தொண்டைமானை எதிர்த்து கலகம் செய்ததுடன் தமக்கு அருகில் இருந்த மற்ற குறுநில மன்னர்களையும் துன்புறுத்தினர்.

அவர்களுடைய இடைஞ்சல் எல்லை மீறிவிட்டது. அவர்கள் பெரும்படை திரட்டி விரைவில் போருக்கு வரும் செய்தியை ஒற்றர்கள் அறிந்து வந்து மன்னனிடம் கூறினர்.

தொண்டைமான் சினந்தான். கச்சி ஏகம் பனையும், காமாட்சியையும் கை தொழுதான். படையைத் திரட்டிக் கொண்டு போருக்குப் புறப்பட்டான்.

படைகள் நிலம் அதிர ஆர்ப்பரித்துச் சென்றன. பட்டத்து யானை மீது அமர்ந்து தொண்டைமான், படையைத் தொடர்ந்து சென்றான்.

அவர்கள் பெருங்காட்டைக் கடந்து சென்றனர். காட்டின் நடுவே ஓர் செண்பகச் சோலை. அதில் ஏராளமான முல்லைக் கொடிகள் படர்ந்து கிடந்தன. அவற்றில் மலர்ந்துள்ள பூக்களின் மணம் எங்கும் நிறைந்திருந்தது. அவ்வழியில் மன்னன் ஏறிச் செல்லும் யானையின் காலை ஒரு முல்லைக் கொடி சூழ்ந்து கொண்டது. கணநேரத்தில் யானையின் நான்கு கால்களையும் சுற்றிக் கொண்டது. யானையால் நகர முடியவில்லை. கனத்த சங்கிலியால் கட்டப்பட்டது போல் அது திகைத்து நின்றது. பெருங்குரல் எடுத்துப் பிளிறியது.

மன்னன் நீண்ட வாளால் அக்கொடிகளை வெட்டினான். சிவந்த இரத்தத் துளிகள் தெறித்தன. பசுங்கொடிகளில் இருந்து இரத்தத் துளிகளா என்று திகைத்தான். கீழே இறங்கி சுற்றிப் படர்ந்திருக்கும் கொடிகளை வாளால் விலக்கிப் பார்த்தான்.

ஒப்பிலதாய் முளைத்ததொரு ஒளிவிடும் சிவலிங்கத்தைக் கண்டான். சிவ அபராதம் செய்து விட்டோமே என்று துக்கித்தான். அழுதான், தொழுதான். பச்சிலைகளைக்

கொண்டு இரத்தப் போக்கை அடைத்தான். சிவ பெருமானின் திருவடியில் வேரற்ற மரம்போல வீழ்ந்தான்.

சிவபெருமான், அவன் முன்னே தோன்றினார். அவனுக்கு அருள்புரிந்தார். நந்திதேவரை அவனுக்குத் துணையாக போர்புரிய அனுப்பினார்.

தொண்டைமான் படைகளுடன் சென்று குறும்பர்களை அடக்கினான்.அவர்களது கோட்டைகளை அழித்தான். அங்கிருந்த அபூர்வ பொருள்களைக் கைப்பற்றிக் கொண்டு மீண்டான். அவற்றில் இரண்டு வெள்ளெருக்கந் தூண்கள் தனிச்சிறப்பு கொண்டவைகளாக இருந்தன.

மன்னன் வெற்றியுடன் திரும்பினான். வழியில் தமக்கு அருள்பாலித்த பெருமானுக்கு ஆலயம் எழுப்பினான்.

முல்லைக் கொடிகளுக்கு இடையில் இருந்து வெளிப்பட்டதால் அந்த இடத்திற்கு திருமுல்லை வாயில் என்றும் பெருமானுக்கு மாசிலாமணி என்றும் பெயர் சூட்டப்பட்டது.

ஆலயத்தைச் சுற்றி ஊர் நிர்மாணிக்கப்பட்டது. மன்னருக்கு துணை சென்றதை என்றென்றும் நினைவூட்டிக் கொண்டிருக்கும் வகையில் நந்தியம் பெருமான் கருவறையை நோக்காமல் கிழக்கு நோக்கியவாறு எழுந்தருளியுள்ளார்.

சுந்தர மூர்த்தி சுவாமிகள் இத்தலத்துக்கு எழுந்தருளி "திருவும் செல்வமும் உன்சீருடைக் கழல்கள்" என்று தொடங்கி ஒரு பதிகம் பாடியுள்ளார். அதில் இவ்வரலாற்றை மேலே குறித்த வரிகளின் மூலம் சாசனம் செய்துள்ளனர்.

மன்னனின் வாளால் வெட்டுப்பட்ட இறைவன் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது ஓர் சித்திரை சதயத்திலாகும்.

அதையொட்டி சித்திரை சதயத்திற்கு இரண்டு நாட்கள் முன்பாக காப்பிடப்பட்ட சந்தனத்தைக் களைந்து விட்டு மூன்று நாட்கள் நிஜரூப தரிசனமாக அன்பர்கள் லிங்கத் திருமேனியைத் தரிசிக்கும்படி வைத்திருக் கின்றனர்.

பிறகு சிறப்பு வழி பாடுகளைச் செய்து புதிய சந்தனத்தால் காப்பிடுகின்றனர். சந்தனத்தால் பொதியப் பட்டுள்ள சந்தனமகா லிங்கமாகவே எப்பொழுதும் மாசிலா மணீசுவரர் விளங்குகிறார். எனவே, தினசரி அபிஷேகமெல்லாம் ஆவுடை யாருக்கே நடைபெறுகின்றன.

பகைவர்களை அடக்க இப்படி எப்போதும் சந்தனச்சாந்தின் தண்மையில் இருக்கும் பெருமான் நமக்கு தண்ணருள் தந்து இன்னருள் பொழிந்து கொண்டிருக்கிறார். அவரை வணங்கி நலம் பெறுவோம்.

தொண்டை நாட்டுத் திருத்தலங்களுள் ஒன்றான திருமுல்லைவாயில் சென்னைக்கு அருகில் உள்ளது.

சோழ நாட்டில்–தஞ்சை மாவட்டத்தில் தென் திருமுல்லைவாயில் உள்ளதால், இது வட திருமுல்லைவாயில் என அழைக்கப் படுகிறது. சென்னை ஆவடி சாலையில் திருமுல்லைவாயில் அமைந்துள்ளது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தலத்துப் பதிகத்தில் ஒவ்வொரு பாட்டிலும், 'அடியேன் படுதுயர்களையாய் பாசுபதா பரஞ்சுடரே!' என்னும் தொடரை இறுதியில் வைத்துப் பாடுந்திறம் நெஞ்சை நெகிழ வைக்க வல்லன.

"திருவு மெய்ப்பொருளும் செல்வமும்
எனக்குன்
சீருடைக் கழல்கள் என்றெண்ணி
ஒருவரை மதியாதுறாமைகள் செய்து
மூடியு முறைப்பனாய்த் திரிவேன்
முருகமர் சோலைசூழ் திருமுல்லை
வாயிலாய் வாயினால் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர்
களையாய்
பாசுபதா பரஞ்சுடரே" – சுந்தரர்

அருணகிரிநாதரின் திருப்புகழிலும், வடலூர் இராமலிங்க சுவாமிகளின் அருட்பாவிலும், இத்தலம் இடம் பெற்றுள்ளது.

**தொடர்புகொள்க:**

செயல் அலுவலர்
அருள்மிகு மாசிலாமணீஸ்வரர்
திருக்கோயில்
திருமுல்லை வாயில்– 600062
திருவள்ளூர் மாவட்டம்.
தொலைபேசி: 044–26376151

# தெரியுமா?

## வினா

1.உலகின் மிகப் பழமையான மொழிகள் யாவை?
2.பல்லவர் காலத்தில் பக்தி இயக்கம் வளர முதற்காரணமானவர் யார்?
3.திருநாவுக்கரசரைச் சைவ சமயத்திற்கு மாற்றியவர் யார்?
4.திருநாவுக்கரசரால் சைவ சமயத்திற்கு மாறிய மன்னன் யார்?
5.கம்பர் தான் எழுதிய இராமாயணத்திற்கு இட்ட பெயர் யாது?
6.கோச்செங்கணான் எத்தனை மாடக் கோவில்கள் கட்டியதாகத் திருநாவுக்கரசர் குறிப்பிடுகிறார்?
7.பன்னிரு திருமுறைகளையும் பாடியவர்கள் மொத்தம் எத்தனை பேர்?
8.சுந்தரரோடு கயிலை செல்லும் பேறு பெற்றவர் யார்?
9.மாணிக்க வாசகர் பாடிய இரண்டு நூல்கள் என்ன?
10அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராய் இருந்தவர் யார்?
11. பத்தாம் திருமுறையைப் பாடியவர் யார்? நூல் எது?
12.சேக்கிழார் பாடிய நூலின் பெயர் என்ன?
13.சேக்கிழார் தம் நூலுக்கு இட்ட பெயர் என்ன?
14.பன்னிரு திருமுறைகளைத் தொகுத்தவர் யார்?
15.திருஞான சம்பந்தர் பாடிய தேவாரத்தின் சிறப்புப் பெயர் என்ன?
16.ஆதிசங்கரரால் 'திராவிடசிசு' என்றழைக்கப்பட்டவர் யார்?
17.திருஞான சம்பந்தரின் பெற்றோர் பெயர் என்ன?
18.திருநாவுக்கரசரின் பெற்றோர் யாவர்?
19.ஏழாம் திருமுறை பாடியவர் யார்?
20.சுந்தரரின் பெற்றோர் யாவர்?

## விடை

1. இலத்தீன்,கிரேக்கம், ஈப்ரு, வடமொழி, தமிழ்.
2. திருநாவுக்கரசு சுவாமிகள்
3. அவரது தமக்கை திலகவதியார்
4. மகேந்திர வர்மப் பல்லவன்
5. இராமாவதாரம்
6. எழுபது திருக்கோயில்கள்
7. 27 பேர்கள்
8. சேரமான் பெருமாள் நாயனார்
9. திருவாசகமும், திருக்கோவையாரும்
10. மாணிக்கவாசகர்
11. திருமூலர், திருமந்திரம்
12. பெரிய புராணம்
13. திருத்தொண்டர் புராணம்
14. நம்பியாண்டார் நம்பி
15. திருக்கடைக்காப்பு
16. திருஞான சம்பந்தர்
17. சிவபாத இருதயர், பகவதியார்
18. புகழனார், மாதினியார்
19. சுந்தரர்
20. சடையனார், இசைஞானியார்

# திருமுறை அமுதம் தேடிய வள்ளலார்

சக்தி. பேராசிரியர் த.சோமசுந்தரம், மேலையூர்.



வடலூர் வந்த இராமலிங்க வள்ளலார் சைவக் குடும்பத்தில் பிறந்தவர். சைவத் திருமுறை நூல்களில் திளைத்தவர். சைவ சமயக் குரவர்களில் மணிவாச கரைத் தம் மானசீக குருவாக ஏற்றுக் கொண்டவர். தில்லை நடராசரின் தெய்வ ருசியைக் கண்டவர். அவர் நடனத்தில் மனம் உருகியவர். அருள்முறை அள்ளிப் பருகியவர். அதை நமக்கெல்லாம், இல்லை யென்னாது ஊட்டியவர். அதனாலேயே வள்ளலார் என்று பேரெடுத்தவர். திருவருள் தெள்ளமுதை பன்னிரு திருமுறைப் பாக்களில் இருந்து பெற்றவர்.

வள்ளல் பெருமான் திருஞான சம்பந்தரைப் புகழ்ந்து பாடும்போது மனம் களிப்படைந்து ஆடுவதைப் போல ஒரு களிப்பாட்டப் பாட்டு உண்டு.

**"சைவம் தழைக்கத் தழைத்தாண்டி– ஞான**
**சம்பந்தப் பேர் கொண்டு அழைத்தாண்டி"**

என்பது அந்தப் பாட்டு.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு. அதில் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் அருளிச் செய்தவை. அவற்றை 'முக்கனி' என்றே வள்ளலார் அழைக்கிறார். மா, பலா, வாழை என்பனதான் முக்கனிகள். மூன்று பழங்கள். மாம்பழத்தை அப்படியே சாப்பிடலாம்; பலாப் பழத்தை அப்படியே சாப்பிட முடியாது. கையிலும், கத்தியிலும் எண்ணெய் தடவிக் கொண்டு கரடு முரடான தோலை அறுத்து, சுளையைச் சுற்றி இருக்கிற நாரை அறுத்து விட்டு, சுளையை எடுத்தபின் உள்ளே இருக்கிற கொட்டையையும் நீக்கிவிட்டுத் தான் சாப்பிட வேண்டும்; வாழைப் பழத்தைத் தோலை உரித்து விட்டுத்தான் சாப்பிட வேண்டும். ஒவ்வொரு பழத்துக்கும் ஒவ்வொரு முறை.

திருஞானசம்பந்தர் பாடிய முதல் மூன்று திருமுறைகளிலும் மாம்பழம் போல அப்படியே முழுமையாக எளிமையாக அனுபவித்துக் கொள்ளக் கூடிய பாடல்கள் உண்டு; பலாப் பழம் போல, கஷ்டப்பட்டு, பதம் பிரித்துப் பொருள் பிரித்து அனுபவிக்கக்கூடிய பாடல்களும் உண்டு. வாழைப் பழம் போல, கொஞ்சம் மட்டும் முயற்சி செய்து 'உண்டு விடக் கூடிய' பாடல்களும் உண்டு. அதனால்தான் முதல் மூன்று திருமுறைகளை முக்கனி என்றாரோ!

இந்த மூன்று திருமுறைகளையெல்லாம், இவ்வாறு தனித்தனியாகப் பிழிய வேண்டுமாம்! ஆமாம்! மூன்று கனிகளையும், ஒரே மாதிரியாக, ஒரே நேரத்தில் பிழிந்து விட முடியாதல்லவா! அதிலும், இறையருளை மட்டும் இதய வடிகட்டியில், வடி கட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். பின் முக்கனியின் சாற்றை ஒன்றாகக் கூட்ட வேண்டுமாம்!

நான்கு, ஐந்து, ஆறு ஆகிய திருமுறைகள் அப்பர் சுவாமிகள் அருளியவை. அதில் உள்ள அனுபவப்


பாடல்கள் சர்க்கரை போன்று இனிப்பானவை. சர்க்கரை காய்ச்சுவது அவ்வளவு எளிதல்ல. அதை ஆலையில் இட்டு இறுக்கிப் பிழிய வேண்டும். பிழிந்து எடுக்கப்பட்ட சாற்றை கொப் பரையில் இடவேண்டும். பெரிய அடுப்பில் சாற்றுக் கொப்பரையை வைத்து பெரிய தீயை மூட்ட வேண்டும். பொங்கி வரும்போது, அதில் மேலே எழுந்து வரும் கசடுகளை நீக்க வேண்டும். உரிய பதத்தில் இறக்கி வைத்து, ஆற வைத்து சர்க்கரை தயாரிக்க வேண்டும். சர்க்கரைப் பாகும் பதமும் எவ்வளவு கஷ்டப்பட்டுத் தயாரிக்கப்படுகிறதோ அப்படி உழைத்துப் பதமான அருளைப் பெற்று இதமாக மக்களுக்கு வழங்கியவர் அப்பர் பெருமான். அதனால், அப்பர் சுவாமிகள் பாடியருளிய நான்கு, ஐந்து, ஆறு ஆகிய திருமுறைகளை சர்க்கரைப் பொடி என்று வள்ளலார் சாதிக்கிறார் என்று கொள்ளலாம்.

ஏழாம் திருமுறை சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய பனுவல்களைக் கொண்டது. கற்கண்டின் பொடியாக ஏழாம் திருமுறையை இராமலிங்க சுவாமிகள் நினைத்துப் பாடுகிறார். கற்கண்டு ஏற்கனவே தயாராக இருக்கிறது. அதனைப் பொடி செய்வது சுலபந்தானே! அதுபோல இறையருளை எளிதில் பெற்றவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அதனால் ஏழாந் திருமுறையை கற்கண்டின் பொடியாகக் கொள்வது பொருத்தம் தானே!

முக்கனிச் சாறுகள் போன்ற முதல் மூன்று திருமுறைகள், சர்க்கரை போன்ற நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகள், கற்கண்டின் பொடி போன்ற ஏழாந்திருமுறை இவற்றின் இறையனுபவ இனிப்புகளை எல்லாம் ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டுமாம்! அப்புறம்...

அடுத்து எட்டாந்திருமுறையான திருவாசகம் வருகிறது. 'திருவாசகம் என்னும் தேன்' என்பது திருவாசகத்துக்கே உரிய சிறப்பு மொழி. மணிவாசகரைத் தம் மனம் கவர்ந்த குருவாக ஏற்றுக் கொண்டவர் அல்லவா இராமலிங்க அடிகளார்!

"வான் கலந்த மாணிக்க வாசக
நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ்சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து
செழுங்கனித் தீஞ்சுவை கலந்து



ஊன் கலந்து உயிர் கலந்து
உவட்டாமல் இனிப்பது வே"

என்று ஊறித் திளைத்தவர் வள்ளல் பெருமான்.

அதனால், 'தேன் கலந்து' என்பது திருவாசக அனுபவத் தேன் கலந்து கொள்வதைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

அதுமட்டுமல்ல... தேனீ தேனைப் பூக்களில் இருந்து சேகரிக்கிற வேலையை மட்டும் செய்யவில்லை. தேனீ தான் சேகரித்து வந்த பூக்களின் தேனோடு தன் வாயில் சுரக்கிற ஒரு திரவத்தையும் சேர்த்துத் தேனை உற்பத்தி செய்கிறது. அதுபோல, மாணிக்க வாசகப் பெருமானும், தான் பெற்ற இறையனுபவப் பூந்தேனுடன், தன்னுள் பொங்கியெழுந்த ஆனந்த அமுதத்தையும் கலந்து தன் திருவாசகத் தேனை உற்பத்தி செய்து நமக்கெல்லாம் வழங்கியுள்ளார்.

அதனாலும், ஏற்கனவே உள்ள சுவைக் கலவையோடு எட்டாந் திருமுறையாகிய திருவாசகத் தேனைக் கலந்து கொள்ளச் சொல்கிறார் வள்ளலார்.

ஒன்பதாந்திருமுறை திருப்பல்லாண்டு முதலான பாடல்களின் தொகுதி. பால் ஒரு முழுமையான சத்துணவு. அதுபோல, அருள் சத்து ஊட்டம் அளிக்கக் கூடிய ஒன்பதாம் திருமுறை அனுபவப் பாலையும் கூட்டிக் கொள்ள வேண்டுமாம்.

திருமுறை அருளிய திருமந்திரப் பாடல்கள் பத்தாம் திருமுறை ஆகும். அது தேங்காய்ப் பாலைப் போன்றதாம்! தென்னை வித்து உருவாவதே கஷ்டம். நல்ல வித்து, நல்ல நிலத்தில், நல்ல நீரில், நல்ல பராமரிப்பில் இருந்தாலே முளைக்க மூன்று மாதங்களாவது ஆகும். பலன் தர ஆரம்பிக்க நான்கைந்து ஆண்டுகள் ஆகும். அப்படி விளைய ஆரம்பித்தாலும் காய் முற்ற இரண்டரை மாதங்கள் ஆகும். நன்கு முற்றிய காயைப் பறிக்க வேண்டும். மட்டையை உறிக்க வேண்டும். கடினமான ஓட்டை உடைக்க வேண்டும். உள்ளே உள்ள பருப்பைத் துருவி எடுக்க வேண்டும். ஆட்டுக்கல்லில் போட்டு அரைக்க வேண்டும். நன்றாகப் பிழிந்து பால் எடுக்க வேண்டும். தூசு தும்பு நீங்க வடிக்க வேண்டும். பின்னரே குடிக்க வேண்டும். குடித்த தேங்காய்ப் பால் உடம்புக்குப் பிடிக்க வேண்டும். சாதாரணமான தேங்காய்ப் பாலுக்கே இவ்வளவு கஷ்டம். அதுபோல, திருமூலரின் திருமந்திரப் பாடல்கள் அழகானவை; ஆனால், அர்த்தம் புரிந்து கொள்ளக் கஷ்டமானவை.

தேங்காய் வித்து வைத்து, தென்னங்கன்றாக, நட்டு வைத்து, வளர்த்து, முற்றிய காய் பறித்து, உரித்து, உடைத்து துருவி, அரைத்துப் பால் பிழிவது போலக் கஷ்டப்பட்டுத் திருமூலர் திருமந்திரத்தைப் புரிந்து அந்தத் 'தேங்காய்ப் பாலை' உட்கொள்ளுவதும் கடினம் ஆகும். அதனால், தெங்கின் தனிப் பாலாகத் திருமூலர் திருமந்திரம் அனுபவம் சொல்லப் படுகிறதோ!

திருமுருகாற்றுப் படை உள்ளிட்ட பாடல்களின் தொகுதி பதினோராம் திருமுறையாகும். சத்துக்கள் நிறைந்த பருப்புகள் போன்றவை பதினோராந் திருமுறைப் பாடல்கள். பூச்சி அரிக்காத பருப்புகளே சிறந்தவை. வேர்க்கடலைப் பருப்பு, முந்திரிப் பருப்பு, பாதாம் பருப்பு போன்ற சிறந்த பருப்புகள் போல அருட்சத்து நிறைந்த பதினோராம் திருமுறைப் பாடல் அனுபவங்களையும், நிறைய விரவிச் சேர்த்துக் கொள்ள வேண்டும்! அவநம்பிக்கைப் பூச்சி அரிக்காத அருள் சத்துப் பருப்புகள் பதினோராந்திருமுறை அனுபவ அமுதம்.

பன்னிரண்டாம் திருமுறை பெரிய புராணம். அதற்குத் திருத்தொண்டர் புராணம் என்னும் பெயரும் உண்டு. சிவ பெருமானுக்கு தொண்டு செய்து இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட அவர்களைத் திருத்தொண்டர்கள் என்று அடைமொழி கொடுத்துச் சிறப்புச் செய்வது பொருத்தமே. திருத்தொண்டர்களின் பக்தியையும், அதில் அவர்கள் கொண்ட உறுதியையும் சோதனை செய்து பார்த்த பிறகே இறையருள் அவர்களுக்குக் கிடைத்தது.

அது நெய் தயாரிப்பதைப் போன்ற சோதனை மிகுந்த பாதையாகும். நெய் தயாரிப்பது சுலபமா என்ன? நல்ல பசும்பாலை முறையாகக் காய்ச்ச வேண்டும். நன்றாக ஆற வைக்க வேண்டும். நல்ல மோர் அல்லது தயிர் கொண்டு புரை ஊற்ற வேண்டும். நன்கு உறைந்த தயிரை மத்துப் போட்டுக் கடைந்து கொண்டே இருக்க வேண்டும். மெல்ல மெல்ல மேலெழும்பி வரும் வெண்ணெயைச் சிறுகச் சிறுகத் திரட்ட வேண்டும். திரட்டிய வெண்ணையை சட்டியில் போட்டுக் காய்ச்ச வேண்டும். ஒரு வாசனை வரும் அதை முறிக்க நல்ல முருங்கை இலை போட்டுக் காய்ச்ச வேண்டும். 'தளபுள' என்று சத்தம் வரும். அந்த ஓசை அடங்கும் வரை காய்ச்ச வேண்டும்.

நறுமணம் ஒன்று 'கமகம' என்று வரும். அப்போது நெய்யை இறக்கி வைத்து விட வேண்டும். நெய் காய்ச்சுவது லேசான காரியம் இல்லை. அதுபோல, சோதனைகள், கஷ்டங்கள், வாதனைகள் கடந்த நறுமணம் மிகுந்த நெய் போல நிலை அடைந்தவர்கள், பெரிய புராணத்து அடியார்கள். எனவே, பெரிய புராண அடியவர்களின் இறையனுபவப் பேரின்பம் என்பதால் இராமலிங்க அடிகள் குறிப்பிடும் நெய் என்பது பெரிய புராணப் பேரின்பம் என்று கொள்வது பொருத்தமே. அந்த அமுதையும் கலந்து கொள்ள வேண்டுமாம்!

இந்தத் திருமுறைகள் தந்த அனுபவங்களையெல்லாம் இனிப்பிலும் இனிப்பான அனுபவங்கள் என்று எண்ணித் திளைக்கின்ற வள்ளலார், இவற்றையெல்லாம் கலந்து கூட்டி ஒரு இனிப்பு அமுதம்

செய்தால் எப்படியிருக்கும் என்றும் நினைத்துப் பார்க்கிறார். இவற்றையெல்லாம் ஒன்று திரட்டி, இளஞ்சூடாகக் காய்ச்சித் தயாரித்தால் ஒரு அமுதம் எப்படியிருக்குமோ அதை விட இனித்திடும் தெளிவான, தூய்மையான அமுதே! தெள்ளமுதே! நடராசரே!

அநித்தியமான– நித்தியம் இல்லாத இந்த உலக வாழ்க்கை அறுந்து போக – பிறவிச்சூழல் அற்றுப் போக சிதம்பரத்தில் ஆடுகின்ற அரசே! நின் திருவடிக்கு இந்த இறையனுபவங்களால் ஆன அமுதத்தையே மாலையாகச் சூட்டுகிறேன்! அணிந்தருள வேண்டும் என்று வேண்டுகிறார் வள்ளலார்.

மேலோட்டமாகப் பார்க்கிறபோது முக்கனியின் சாறு எடுத்து, சர்க்கரையும், கற்கண்டின் பொடியும் மிகக் கலந்து, தனித்த நல்ல தேனை அதில் ஊற்றி, பசும்பாலையும், தேங்காய்ப் பாலையும் சேர்த்து, நல்ல பருப்பு வகைகளை நிறையக் கலந்து நல்ல நெய் விட்டுக் கிளறி, இளஞ்சூடான பதத்தில் இறக்கி எடுத்து வைத்த இனிப்புக் கட்டியை விட இனிக்கின்ற சுவையே என்று ஏதோ புது இனிப்புவகை ஒன்று செய்து சாப்பிடத் தயாரிப்பு முறையை வள்ளலார் சொல்லுகிறாரோ என்று கூட எண்ணத் தோன்றுகிறதோ.

ஆனால், வள்ளலார் கண்ட தெள்ளமுதம் அப்படிப்பட்ட சாதாரண இனிப்பாகவா இருக்கும்! சைவத் திருமுறையில் திளைத்தவர். தாமே திருமுறை கண்டவர், தாம் பெற்ற இறை அனுபவம் எல்லாம் சைவத் திருமுறையில் திளைத்ததால் வந்தது என்று மறைபொருளாகச் சொல்லியிருக்கிறார் என்றே தோன்றுகிறது, சரிதானே! அந்த அமுதை நாமும் உண்ணலாம்.

வள்ளலார் வழங்கும் தெள்ளமுதப் பாடல் இதோ:

**தனித்தனி முக்கனி பிழிந்து**
**வடித்து ஒன்றாக் கூட்டி**
**சர்க்கரையும் கற்கண்டின்**
**பொடியும் மிகக் கலந்தே**
**தனித்த நறும் தேன்பெய்து**
**பசும் பாலும் தெங்கின்**
**தனிப்பாலும் சேர்த்து ஒரு**
**தீம்பருப்பிடியும் விரவி**
**இனித்த நறும் நெய் அளைந்தே**
**இளஞ்சூட்டினில் இறக்கி**
**எடுத்த**
**சுவைக் கட்டி யினும்**
**இனித்திடும் தெள்ளமுதே!**
**அனித்தம்அறத் திருப்பொதுவில்**
**விளங்கு நடத்தரசே!**
**நின்னடி மலர்க்கு என் சொல்**
**அணியாம் அலங்கல்**
**அணிந்தருளே!**


தமக்கென்று ஒரு தனிப் பாதையை வளர்த்துக் கொண்டு நம்மையும், அந்தப் பாதையில் தாமே அழைத்துச் செல்பவர் வள்ளல் பெருமான்.

மேற்கண்ட பாடலில் அமைந்துள்ள, 'முக்கனி' தேன், நெய் முதலான வரிசைப் பாங்குகள் அவற்றை சைவத் திருமுறைகளோடு பொருத்திப் பார்க்கிற உணர்வை நமக்குத் தந்தது. இதில் நமக்கும் மகிழ்ச்சி!

வள்ளலார் திருமுறையில் தேடிய, தெளிந்து அருந்திய தெள்ளமுதத்தை நாமும் அருந்த ஓர் நல்ல வாய்ப்புக் கிடைத்தது. அப்படித்தானே!


**திருக்கோயில்**

**திங்கள் இதழ்**



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ. 10/- |
| ஓராண்டு சந்தா | ரூ. 120/- |
| ஐந்தாண்டு சந்தா | ரூ. 500/- |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ. 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | ரூ. 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

| | |
|---|---|
| 1.பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ. 15,000/- |
| 2.முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3.பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 7,500/- |
| 4.உட்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 5.உட்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை

**ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,**

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

என்ற முகவரிக்கு அனுப்பவும்

# ஆரணி சம்பங்கி பிச்சாண்டீஸ்வரர்

பனையபுரம் அதியமான்

**தொ**ண்டை வளநாட்டில் ஆரணி ஆற்றின் கரையில் அமைந்துள்ள பஞ்சபிரம்ம தலங்களில் ஒன்றாகத் திகழ்வது, ஆரணி சிவகாமி வல்லி உடனாய சம்பங்கி பிச்சாண்டீஸ்வரர் திருக்கோயிலாகும்.

**சம்பங்கி காடு**

பழங்காலத்தில் ஆரணி ஆற்றின் கரையோரத்தின் நீர்வளத்தால் அப்பகுதி முழுவதும் சம்பங்கி கொடிகள் நிறைந்து காணப்பட்டன. இந்தக் கொடிகளுக்கு மையப்பகுதியில் ஒரு சிறிய மண்மேடு அமைந்திருந்தது. அதன்மீது ஒரு பசு நின்று நாள்தோறும் தனது பாலைப் பொழிந்துவந்தது. இதனைக் கண்டுபிடித்த மாடு மேய்க்கும் சிறுவன் தனது உரிமையாளரிடம் விவரத்தைக் கூறினான்.

மறுநாள் அதே நேரத்திற்கு அங்கு வந்த மாட்டின் உரிமையாளர், பசு பால் பொழிந்து சென்றதும், அந்த மண்மேட்டை தனது கோடாரியால்





வெட்டினார். அப்பொழுது அதிலிருந்து ரத்தம் பீறிட்டது. இதைக் கண்டு பயந்த அவன், ஊர் மக்களை அழைத்து வந்தான். மண் மேட்டையும் சம்பங்கிக் கொடிகளையும் முழுவதுமாக அகற்றியபோது அதிலிருந்து ஓர் அழகிய சிவலிங்கம் தென்பட்டது. தனது தவறை உணர்ந்த அவன், தன்னை மன்னித்தருளுமாறு இறைவனிடம் வேண்டி நின்றான். உடனே ரத்தம் நின்று பழைய நிலைக்கு வந்தது. இதன்பின் அப்பகுதியை ஆண்ட மன்னனின் ஆதரவில் அந்தச் சிவலிங்கத்திற்கு ஆலயம் எழுப்பப் பட்டது. அந்த ஆலயமே இன்று சம்பங்கி பிச்சாண்டீஸ்வரர் ஆலயமாகத் திகழ்கின்றது.

### பஞ்ச பிரம்ம தலம்

தொண்டைவள நாட்டில் (தற்போது ஆந்திர மாநிலத்தில் அமைந்துள்ள) நகரி மலையிலிருந்து தோன்றி ஓடிவரும் ஆறு ஆரணி என்று அழைக்கப்படுகிறது இதனைப் பிரம்ம தேவன் ஆரணிக் கட்டையில் இருந்து தோற்றுவித்தான் என்று புராணம் கூறுகிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் ரிஷிகள் இந்த ஆற்றின் கரையோரங்களில் ஆசிரமங்கள் அமைத்து தவம் செய்து வந்தனர். அங்கு சிவபெருமானுக்கு சிறிய ஆலயங் களையும் எழுப்பி வழிபட்டனர். அவற்றில் ஒன்றாக திகழ்வது ஆரணி சம்பங்கி பிச்சாண்டீஸ்வரர் ஆலயமாகும்.

ஆரணி ஆற்றோரத்தில் பிரம்ம தேவனால் உருவாக்கப்பட்ட திருக்கோயில்கள் பல இருந்தபோதிலும் இராமகிரி, சுருட்டப்பள்ளி, ஆரணி, அரியத்துறை, பழவேற்காடு சிந்தாமணீஸ்வரர் ஆகிய ஐந்து ஆலயங்கள் பஞ்சபிரம்ம தலங்களாக போற்றப்படுகின்றன. இவற்றில் முதல் இரண்டு ஆலயங்கள் இன்றைய ஆந்திர பிரதேசத்திலும், மற்ற மூன்று ஆலயங்கள் தமிழ்நாட்டிலும் அமைந்துள்ளன. ஆரணி ஆறு சங்கமிக்கும் வங்கக் கடலோரத்தில் பழவேற்காடு சிந்தாமணீசுவரர் ஆலயம் அமைந்துள்ளது.

### தலமரம், தீர்த்தம்

பசுமைகலந்த மஞ்சள் நிறப் பூக்களைத் தரும் சம்பங்கி கொடிகளுக்கு இடையே இறைவன் வீற்றிருந்ததால், இத்தலத்தின் தலமரமாக சம்பங்கி கொடி உள்ளது. ஆரணி ஆறு தீர்த்தமாகும். கிழக்கு நோக்கி ஓடி வரும் ஆரணி ஆறு, இவ்வாலயத்தைத் தொட்டு வடக்கே திரும்பி, மீண்டும் கிழக்கு நோக்கி ஓடுகின்றது.

இப்படி ஆறுகள் வடக்கு நோக்கி திரும்பும் இடங்களை காசிக்கிணையாகச் சொல்வர். இந்த இடங்களை வட மொழியில் உத்திரவாகினி என்பர்.

### தொன்மைச் சிறப்பு

கல்வெட்டுக்களில் இவ்வூர் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து பையூர்க் கோட்டத்து ஆரணி என குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாலயத்திலிருந்து பன்னிரண்டு கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் இவ்வாலயத்தின் தொன்மைச் சிறப்பை அறிய முடிகிறது. விக்கிரம சோழன் (கி.பி.1120) காலத்திய கல்வெட்டு, இம்மன்னனின் புகழை எடுத்துரைக்கின்றது. இக் கல்வெட்டுகள் மூலம் இவ்வாலயத்திற்கு வழங்கப்பட்ட கொடைகள் பற்றிய விவரங்கள் தெரியவருகின்றது. சில கல்வெட்டுகள் சிதைந்தும் காணப்படுகின்றன.

பாளையம் துமினிச் செட்டியார், நகரத்தார், வேதகிரி செட்டியார், நல்லூர்க்குடி உடையார் மகன் தருமி சுந்தரம், கண்ணன் நாராயண செட்டியார், நயினார் அம்மாள் என பல்வேறு

கொடையாளர்கள் இவ்வாலயத்திற்குத் திருப்பணி செய்ததை அறிய முடிகிறது.

இது தவிர, வரதப்ப நாயக்கர் மகன் தொப்பை நாயக்கர் மற்றும் திருமெய்யூரைச் சேர்ந்த சிலருக்கும் காவல் மான்யம் வழங்கப்பட்ட செய்தியையும் கல்வெட்டின் மூலம் அறிய முடிகிறது.

## ஆலய அமைப்பு

மூன்று நிலை கொண்ட இராஜகோபுரம் கிழக்குநோக்கி அமைந்துள்ளது. இராஜகோபுரத்தை அடுத்து வலதுபுறம் திருக்கல்யாண மண்டபம் காட்சி தருகின்றது. இம்மண்டபம் துருக்கல்லைக் கொண்டு அமைக்கப்பட்ட மண்டபம் ஆகும்.


மண்டபத்தின் எதிரே பலிபீடமும் கொடிமரமும் அதையடுத்து கொடி மண்டபமும் அருகே நந்தியும் காட்சி தருகின்றன. தெற்கு நோக்கிய வாயில் வழியே உள்ளே நுழைந்ததும், எளிய உருவில் அன்னை சிவகாமவல்லி காட்சி தருகின்றாள். மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது என்பதற்கு அன்னை சாட்சியாக விளங்குகின்றாள். அன்னையின் நேர் எதிலே இரு பாதுகைகள் கல்லில் அமைக்கப்பட்டுள்ளன. இது சிவகாம வல்லியின் பாதுகை என கூறப்படுகின்றது. இதனருகே நவக்கிரக சந்நிதி அமைந்துள்ளது. இதே பகுதியில்



மாணிக்கவாசகர் தனியாகவும், சற்று தொலைவில் தேவாரம் பாடிய மூவரும் வடக்குநோக்கி காட்சி தருகின்றனர்.

இதனைக் கடந்து, வடக்கு நோக்கி உள்ளே நுழைந்ததும், நடராஜர் சந்நிதி காட்சி தருகின்றது. மார்கழி ஆருத்ராவின்போது இவர் வீதியுலா வந்து காட்சியளிக்கிறார்.

சதுரமான ஆவுடையாருடன் கிழக்கு நோக்கிய வராக இறைவன் சம்பங்கி



பிச்சாண்டீஸ்வரர் காட்சி தருகின்றார். இந்த சிவலிங்கத் திருமேனி சுயம்பு வடிவமானது. கோடாரியால் பட்ட வடு இவரது திருமேனியில் இன்றும் புலப்படுகிறது.

ஆலய வலச்சுற்றில் அமைந்த சந்நிதியில் பெரிய வடிவில் வீரபத்திரர் பத்திரகாளி உருவங்கள், சூரியன் சந்நிதி, வடக்கு நோக்கிய விநாயகர் சந்நிதி, தர்மசாஸ்தா சந்நிதி, உள்ளன. காளத்தீஸ்வரர், வள்ளி தெய்வயானை உடனுறை முருகப் பெருமான், சண்டிகேஸ்வரர், இராகு கேது தனிச்சந்நிதி, தனி சனிபகவான், கயிலாசநாதர், அண்ணாமலையார் ஆகிய சந்நிதிகளும் திருக்கல்யாண மண்டபமும் அதன் பின்புறம் பைரவர் சந்நிதியும் அதன் எதிரே பைரவர் வாகனமும் அமைந்துள்ளன.

**தரிசன நேரம்**

காலை 7.00மணி முதல் 12.00 மணி வரையிலும், மாலை 4.30மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் ஆலயம் திறந்திருக்கும்.

**விழாக்கள்**

இவ்வாலயத்தில் பிரதோஷம், கிருத்திகை, மகா சிவராத்திரி முதலியவை சிறப்பாகக் கொண் டாடப்படுகின்றன. இவ்வாலயத்தின் பிரம்மோற்சவ விழா சித்திரை மாதத்தில் பன்னிரண்டு நாள்கள் வெகு விமரிசையாக கொண்டாடப் படுகின்றது.

**நிர்வாகம்**

இவ்வாலயத்திற்கு பேரிச்செட்டி யார் சமூகத்தவர் பரம்பரை அறங் காவலர்களாக உள்ளனர். ஆலய நிர்வாகம், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

**சிவராஜ யோகி சுவாமிகள்**

19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த



சிவராஜயோகி சுவாமிகள் திருவொற்றியூரில் தொடங்கி 27 சிவன்கோயில்களில் பதிகங்கள் பாடி ஆரணியில் சமாதி அடைந்துள்ளார். இவரது சமாதி கோயில், ஆரணி–பெரியபாளையம் சாலையோரத்தில் அமைந்துள்ளது. இவர் ஆரணி சம்பங்கி பிச்சாண்டீஸ்வரரைப் பற்றியும் ஒரு பதிகம் பாடியுள்ளார்.

**அமைவிடம்**

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டத்தில் புதுவயல்–பெரியபாளையம் வழித்தடத்தில் ஆரணி அமைந்துள்ளது. (திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள ஆரணி வேறாகும்.) சென்னையி லிருந்து வடக்கே 42 கி.மீ., திருவள்ளூரிலிருந்து வடக்கே 38கி.மீ., பெரியபாளையத்திலிருந்து வடக்கே 7 கி.மீ., சிறுவாபுரியிலிருந்து மேற்கே 5கி.மீ, கும்மிடிப் பூண்டியிலிருந்து மேற்கே 15 கி.மீ, பொன்னேரியிலிருந்து மேற்கே 20 கி.மீ.தொலைவில் ஆரணி அமைந்துள்ளது.

வேண்டிய வரம் தரும் இறைவனாக விளங்கும் ஆரணி சம்பங்கி பிச்சாண்டீஸ்வரர் ஆலயத்தை நாமும் தரிசித்து வரம் வேண்டி பெறலாம்.

## தெய்வப் புலவர் திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளிய

# மெய்யுணர்தல்




முனைவர்
அரங்க. இராமலிங்கம்
தமிழ்ப்பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக்கழகம்


**தெ**ய்வப் புலவர் திருவாய் மலர்ந்து அருளிய திருக்குறள் ஒரு ஞான நூல். சித்தர் நெறியில் வாழ்வோர்க்குக் குறளின் ஈரடிகளும் இரு கண்களைப்போல, வழிகாட்டி ஒளிதரக்கூடியன.

மெய் உணர்தல் என்றால் என்றைக்கும் அழியாமல் சத் ஆக இருந்து சித் ஆகச் செயல்படும் அறிவுப் பொருளாகிய இறைவனை உணர்தல் என்று பொருள். மெய் ஆகிய இந்த ஊனுடம்பினுக்கு உள்ளே உறைந்து–ஒளிரும் பொருளை (இறைவனை) உணர்தல் என்று மற்றொரு பொருள்.

நம் ஊனுடம்பிற்குள்ளே மெய்ப்பொருள் மறைவாக வைக்கப் பெற்றுள்ளது. கோடி சூரியப் பிரகாசமாக ஒளி வீசிக் கொண்டிருக்கும் அறிவு மாணிக்கத்தை வல்லான் (இறைவன்) ஒருவன் நம் புருவ நடுவே

உள்ள ஓங்காரப் பெட்டியில் வைத்து நான்கு கதவுகள் கொண்டு கெட்டித் தாழ்ப்பாள் போட்டு பூட்டி வைத்துள்ளான். என்றாலும் அக்கதவுகளுக்கு ஒரு வட்டப் பூட்டினைப் போட்டு பூட்டி உள்ளான். பூட்டோ சிறியது. அதைத் திறக்கப் பெரிய சாவி வேண்டும்.

மண்தீண்டாப் பாதமாகிய அச்செம்மையான சாவி குருபிரானின் வாய்மையில் வைக்கப் பெற்றுள்ளது. இந்நுட்பத்தை அறிவுடையார் அறிவர். உணர்வுடையார் உணர்வர்; கண்ணுடையார் காண்பர். இந்தத் தேவ ரகசியம் தெரிந்தோர் மட்டுமே மெய் உணர்தல் அதிகாரத்தில் தெய்வப் புலவர் உணர்த்தி உள்ள இறை இரகசியங்களை உணர இயலும்.

மெய்ப்பொருள் காண்பது அறிவு *(355)* என்கிறார் திருவள்ளுவர். ஊனுடம்பினுள் உறைந்து ஒளிரும் மெய்ப்பொருளை இந்தப் பிறவியில் கண்டு பிறவியினின்று விடுபட வேண்டும் என்பதே இவ்வதிகாரம் கூறும் கருத்து.

இறைவனின் திருவடிகளை முழுமையாக நம்பி உணர்ந்து, (கடவுள் வாழ்த்து) ஒரு மெய்க் குருபிரானின் அருளமுதத்தை (வான் சிறப்பு) நாளும் உண்டு உணர்வதால் ஜீவப் பயிர் தழைத்து அதனால் குருபிரானின் பெருமையை அறிந்து அவரைப் போற்றி வழிபட்டு (நீத்தார் பெருமை) அதனால் மனம் தூய்மையாகி, அறத்தின் வழி நின்று ஒழுகினால் (அறன் வலியுறுத்தல்) உடம்பிற்குள்ளே உள்ள பொருளாகிய இறைவனை (மெய்ப்பொருள்) உணர முடியும். பாயிரமாகிய முதல் நான்கு அதிகாரக் கருத்துகளை மேற்சுட்டியவாறு ஊன்றி உணர்ந்து தெளிந்தால்தான் மெய்யாக மெய்யாகவே மெய்ப்பொருளை உணரமுடியும். இந்த வகையில் மெய் உணர்தல் அதிகாரத்தை அறிவுக்கண் கொண்டு உணர்ந்தால் செம்பொருளாகிய இறைவனைக் கண்ணாரக் காணலாம்; பிறவா நெறி அடையலாம் *(358)*. மற்று ஈண்டு வாராநெறி *(356)* பெறலாம்.

இதுவே தெய்வப் புலவரின் முடிந்த முடிபான இறைநெறி. இந்நெறியே சித்தர் நெறி.

***<u>மெய்யுணர்தல்</u>***

பொருள்அல்ல வற்றைப் பொருள்என்று உணரும்
மருளான் ஆம் மாணாப் பிறப்பு *(351)*

மெய்ப்பொருள் (ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி) அல்லாதவற்றை மெய்ப்பொருள் என்று உணரும் அறியாமையால் (மனிதனால் உருவாக்கப் பெற்ற கற்பனை உருவங்கள்– மற்றும் சிறு தெய்வங்களைத் தெய்வம் என உணர்வதால்) பிறப்பு உண்டாகும்.

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு *(352)*

அறியாமை நீங்கப்பெற்று தெளிந்த அறிவு உடையோர்க்கு (மெய்ப் பொருள் கண்ட அறிவுடையோர்கள்) பிறப்பு நீங்கி வீட்டின்பம் கிட்டும்.



ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணியது உடைத்து. **(353)**

ஊனுடம்பில் உள்ள மெய்ப்பொருளைக் கண்டு தெளிந்தோர்க்குத் தாம் வாழும் (உலகத்தார், உறவினர், நண்பர்கள்) உலகத்தைவிட வானம் (இறைவன்) மிகமிக அண்மையுடையது. மெய்ப்பொருளை உணராதவர்களுக்கு அண்மையில் உள்ள வையகம் தூரமாகி விடுகிறது.

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு. **(354)**

மெய்யாகிய உடம்பில் உணர்வாக நிறைந்திருக்கும் மெய்ப்பொருளை உணராதவர் ஐம்புலன் அறிவை மிகுதியாகப் பெற்றிருந்தாலும் அதனால் பயனில்லை.

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு **(355)**

எந்தப் பொருள் எத்தன்மைத்து உடையதாக இருப்பினும் அந்தப் பொருளின் உள்ளீட்டை அறிவது அறிவு. பலநூறு தெய்வங்களைப் பற்றி (எப்பொருள்) பலநூறு கதைகள், புராணங்கள் என ஆயிரமாயிரமாகப் பலவிதமாகச் (எத்தன்மைத்து) சொல்லப்பெற்று இருக்கின்றன. அந்தக் கதைகளின் அடிப்படை என்ன என அறிந்து தெளிந்து–மெய்ப்பொருளாகிய அருட்பெருஞ்சோதியைக் கண்டு வழிபடுவதே அறிவுடைமை.

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.**(356)**


மெய்ஞ்ஞானக் கல்வியினை மெய்க்குரு பிரானது தயவினால் கற்று அதன் பயனாய் மெய்ப்பொருளை (இறைவனை) இப்பிறவியிலேயே கண்ணாரக் கண்டவர் மீண்டும் இவ்வுல கத்திற்கு வாராமல் இருப்பர்.

ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாய்
பேர்த்துள்ள வேண்டாப் பிறப்பு. **(357)**

குருபிரான் காட்டிக் கொடுக்கத் தன் உள்ளத்தில் உள்ள (இருதய கமலத்தில்) மெய்ப்பொருளை ஒருவன் கண்டு உணர்ந்து அப்பொருளாகிய இறைவனே நிலையானவன் என உணர்ந் தால்–அங்ஙனம் உணர்ந்தோனுக்கு இன்னொரு பிறவி உண்டு என எண்ண வேண்டாம்.

பிறப்புஎன்னும் பேதைமை நீங்கச் சிறப்புஎன்னும்
செம்பொருள் காண்பது அறிவு. **(358)**

சிறப்பாகிய செம்பொருளைக் கண்டுவிட்டால் பிறப்புக்குக் காரணமாகிய அறியாமை நீங்கும். இந்த அறிவார்ந்த முயற்சியே அறிவுடைமை. புறத்தில் தேடுவதால் பிறவி ஒழியாது. அகத்தில் செம்பொருளாகிய இறைவனைக் கண்டு களித்து



வழிபடு வார்க்கே பிறவி ஒழியும் என்பது கருத்து.

**தேடிக் கண்டு கொண்டேன்**
**திருமாலொடு நான்முகனும்**
**தேடித் தேடொணாத் தேவனை**
**என்னுளே தேடிக் கண்டுகொண்டேன் -திருநாவுக்கரசர்**

**சார்பு உணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்**
**சார்தரா சார்தரு நோய். (359)**

ஐம்பொறிகளின் சார்பு உணர்ந்து அவற்றின் வேட்கை கெடப் பற்றற்ற நெறியில் ஒழுகினால்-நின்றால்-வாழ்ந்தால் அப்பொறிகளினால் வரும் துன்பம் இல்லை.

**ஆசைப்படப்பட ஆய்வரும் துன்பங்கள்**
**ஆசை விடவிட ஆனந்தமாமே (திருமந்திரம் 2615)**

**அற்றது பற்றெனில்-உற்றது வீடு (திருவாய்மொழி-1:2:5)**

**காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்**
**நாமம் கெடக்கெடும் நோய். (360)**

ஆசை, விருப்பம் எனும் பற்று, சினம், அறியாமை எனும் இம்மூன்றையும் முயற்சி யோடு கூடிய பயிற்சியால் நீக்கி விட்டால் பிறவி நோய் ஒழியும்.

**நிறைவாக....**

மெய்யுணர்தல் அதிகாரம் (36) பிறவாமை நெறியை வலியுறுத்திக் கூறுகிறது.

**வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது**
**வேண்டாமை வேண்ட வரும். (362)**

என அவா அறுத்தல் அதிகாரத்தில் (37) தெய்வப்புலவர் அழுத்தமாகப் பிறவாநெறியை வலியுறுத்திக் கூறுகிறார். இப்பிறப்பில் எதையேனும் ஒன்றை வேண்டிப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால் பிறவாமையைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்கிறார் தெய்வப்புலவர்.

**பிறவாமையைப் பெற வழி என்ன?**
**ஒரே வழிதான் இருக்கிறது? அது என்ன?**

மெய் எனப்படும் இவ் ஊனுடம்பிற்குளே ஒளிர்ந்து (ஜோதி) ஒலியாக (ஓசை) செயல்படும் (விந்து-நாதம்) மெய்ப்பொருளாகிய செம் பொருளைக் கண்ணாரக் கண்டு வழிபடுவதே. இந்த ஒளிநெறிப் பயிற்சியில் ஈடுபட ஈடுபட ஐம்புலனும் ஒடுங்கி இருதய கமலத்துள் இருக்கும் இறைவனோடு ஒன்றிவிடும் நிலை ஏற்படும்.

**ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்**
**தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த விட்டு**
**அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே. (சிவஞானபோதம்)**

மெய்ப்பொருளை அறிந்துரைத்த மெய்கண்டாரின் சிவஞானபோதம் ஒப்பற்ற உயரிய மெய்ஞ்ஞான நூல். குருவும் சீடனும் ஒன்றாய் தவத்தில் ஈடுபடும்போது குருவின் பெருந்தயவினால் சீடன் மெய்ப்பொருளை அருட்காட்சியாகப் (தரிசனம்) பார்க்கிறான்.

அன்னியம் அல்லாத தெய்வம்; அன்பான தெய்வம்; என்னிரண்டு கண்மணிக்குள் இலங்குகின்ற தெய்வம்; அறிவான தெய்வம்; சென்னியில் செம்பொருளாய்த் திகழ்கின்ற தெய்வம். (ஆறாம் திருமுறை-பரசிவ நிலை-4) என வடலூர் வள்ளற்பெருமான் மெய்ப் பொருளை நேர்முகத்தில் அருட்காட்சியாகக் காட்டுகிறார். அருட்காட்சியைக் கண்டவர்களுக்கு உயிர் சார்ந்ததன் வண்ணமாகிவிடும். அதன்பிறகு ஐம்புல வேடரில் அயர்ந்து போகிற அவலம் ஏற்படாது. அவா அறுபடும். அவா அறுபட்டால் மெய்யுணர்வு தோன்றும். மெய்யு ணர்வால் மெய்ப்பொருளை மெய்யின்கண் (உடலில்) காணலாம். அதன்பிறகு,


**இன்பமே எந்நாளும் துன்பமில்லை**

# ஆலய விளக்கம்

## பேராசிரியர். அருணை பாலறாவாயன்

திருக்கோயிலை 'ஆலயம்' என்று வடசொல்லால் குறிப்பர். 'லயம்' என்றால் 'எல்லாம் ஒடுங்குதல்' என்பது பொருள். 'பிரளயம்' என்ற சொல் இப்பொருளில் வழங்கப்படுவது காணலாம். இதுபோல் எல்லாம் ஒடுங்கும் இடம் என்பதைக் குறிக்க 'ஆலயம்' எனப்பட்டது. இச்சொல்லில் 'ஆ' என்ற எழுத்து வடமொழி விதிப்படி அமைந்த துணை எழுத்து ஆகும்.

ஆ=ஆன்மா; லயம்– விரும்பி நிற்கும் இடம் –›இதுவே 'ஆலயம்' என்ற சொல்லுக்குப் பொருள் என்பர். 'ஆலயம்' என்ற சொல் தமிழ்ச் சொல்லே! வடசொல் அன்று என்றும் கருதுவார் உளர். ஆல்–ஆலமரம்; ஐயன்–தலைவன். ஆலமரத்தின் கீழ் அமர்ந்த தலைவன் இருக்குமிடம் 'ஆலயம்' என்று அதற்குப் பொருள் உரைப்பது உண்டு.



வடமொழியில் 'ஆலயம்' என்ற சொல் கோயிலை மட்டும் குறிக்காது காரியாலயம், வஸ்திராலயம், சேவாலயம் எனப் பிற இடங்களையும் ஆலயம் என்ற பெயரால் குறிப்பது வழக்கம்.

தமிழில் 'கோயில்' என்ற சொல் இறைவனிருக்குமிடத்தையும், அரசன் இருக்குமிடத்தையும் குறிக்கும்.

கோ–தலைவன்; அரசன்

இல்–வீடு

ஆயினும் இறைவன் எழுந்தருளியிருக்கும் இடத்தைக் குறிக்கத் 'திருக்கோயில்' என்றே 'திரு' என்னும் அடைமொழியோடு கூறுவர். பொதுவாகத் திருக்கோயில் இறைவன் கோயில்களைக் குறித்தாலும் சிவபிரான் எழுந்தருளியுள்ள கோவிலையே 'திருக்கோயில்' என்று சிறப்பிப்பர்.

கோயில் அமைப்பும் வடிவமும் உள்ளார்ந்த பொருள் கொண்டது எனக் கூறுவர். ஒரு கோயிலில் கோபுரம், மதிற்சுற்று, நீர்நிலை, மகாமண்டபம், கருவறை முதலியன காணலாம். இந்த உலகம் பஞ்சபூதங்களால் ஆனது. அதைக் குறிக்க,

| | | |
|---|---|---|
| கோபுரம் | – | நிலம் |
| நீர்நிலை | – | நீர் |
| மகாமண்டபம் | – | தீ |
| மதிற்சுற்று | – | காற்று |
| கருவறை | – | வான் |

என்ற தத்துவத்தை விளக்கும் என்பர்.

நமது உடம்பில் ஐந்து வகை அமைப்புக்கள் உள்ளன. நம் உடம்பு உணவால் ஆனதாகும். மூச்சு விடக் காற்றுத் தேவை. நினைக்க மனம் வேண்டும், அறிவதற்கு அறிவு உதவும். இவற்றால் நாம் ஆனந்தம் அடையலாம். இவ்வாறு இருக்கும் நம் உடல் பகுதிகளை,

அன்னமய கோசம்–உணவால் அமைவது

பிராணமய கோசம்–காற்றால் அமைவது

மனோமய கோசம்–மனத்தால் அமைவது

விஞ்ஞானமயகோசம்–அறிவால்அமைவது

ஆனந்தமயகோசம்–இன்பத்தால் அமைவது

என ஐந்தாகப் பிரித்து அவை 'பஞ்ச கோசங்கள்' எனப் பெயரிடப்பட்டுள்ளன. இந்த அடிப்படையில்

அன்னமயகோசம் – கோபுரம்,திருமதில்கள்

பிராணமயகோசம்–நீர்நிலைச்சுற்று

மனோமயகோசம்–மகாமண்டபம்

விஞ்ஞானமயகோசம்–முதல்சுற்று(பிரகாரம்)

ஆனந்தமயகோசம்–கருவறை

எனக் குறிப்பர்.

உடம்பில் உள்ள ஆறு ஆதாரங் களாகக் குறிக்கும் இடங்களாகக் கோயிலில் உள்ளவையறிய வேண்டும்.

கோபுரநுழைவு – மூலாதாரம்

கொடிக்கம்பம் – சுவாதிட்டானம்

பலிபீடம் – மணிபூரகம்

நடராசர் சந்நிதி – அனாகதம்

கருவறை நுழைவுவாயில்– விசுத்தி

இலிங்கத் திருமேனி–ஆக்ஞை

சிகரம் தூபி – சகஸ்ராரம்

சைவ சித்தாந்தத்தில் ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம் சிவ தத்துவம் என்ற மூன்று குறிக்கப்படும். திருக்கோயிலில் உள்ள

ஆயிரம்கால் மண் டபம்–ஆன்மதத்துவம்

நூற்றுக்கால் மண்டபம்–வித்தியா தத்துவம்

பதினாறுகால் மண் டபம்–சிவதத்துவம்

என்பர்.

ஒரு திருக்கோயில் வடிவம் ஒருமனிதனைத் தலைகீழாக வரைந்தால் எவ்வாறு அவ் ஓவியம் இருக்குமோ அதுபோல் கட்டப் பட்டிருக்கும் என்பர். மனிதனுடைய உடம்பே ஆலயம் என்று கூறுவர். 'திஹ்' என்ற சொல்லின் அடிப் படையில் 'தேகம்' என்ற வடசொல் எழுந்தது. 'திஹ்' என்ற சொல்லிற்குப் 'பூச்சு' என்பது பொருள்.தேகம், எலும்பு, தோல், நரம்பு, கொழுப்பு, சதை, சுக்கிலம், சோனிதம், சிலேக்குமம்,கண்ணீர் மலநீர், வாதம், பித்தம், கபம் முதலியவற்றின் சேர்க்கையில் தோன்றுவது. இதுபோவே கல், மண்,மரம்,மணிகள் போன்ற பல பொருள் சேர்ந்து 'ஆலயம்' உருவாகின்றது. அழியும் இந்த உடம்பில் வந்து புகுவது அழிவில்லாத உயிர். அதுபோல் ஆலயத்தினுள் கருவறைக்குள் புனிதமான இறைவன் குடிகொள்கிறான்.

உள்ளம் பெருங்கோயில்
ஊன்உடம்பு ஆலயம்

எனத் திருமந்திரம் இதனைக் குறித்தது. இதில் 'பெருங்கோயில்' என்பது இலிங்கத் திருமேனி எழுந்தருளியுள்ள கருவறை: 'ஆலயம்' என்பது புறத்து உள்ள பிற இடங்களை என அறிய வேண்டும். திருக்கோயிலில் அமைந் துள்ள பகுதிகள் பற்றிச் சிறு விளக்கங் களைத் தெரிந்து கொள்வது நல்லது.

**கோபுரம்**

எல்லாரும் தொலைவில் இருந்தே இறைவனி ருக்குமிடம் எண்ணித் தொழுவதற்காக உயரமாகக் கட்டப்படும் இது 'தூலலிங்கம்' எனப்படும். கோபுரத் தில் உள்ள பல்வகையான சிற்பங்கள் பிரபஞ்சத்தின் பிரதிபலிப்பாக உள்ளது. உலகில் எல்லாம் அடங்கியுள்ளன என்ற படைப்புக் கருத்தைக் கோபுரம் விளங்கும். எனவே அதனை வணங்க வேண்டும். 'கோபுர தரிசனம் பாப விமோசனம்' என்பர்.

**பலிபீடம்**

இது பாசத்தைக் குறிப்பது. ஆலயத்தில் எட்டுத் திக்குத் தேவரைக் குறிக்க எட்டுத் திக்கிலும் எட்டுப் பலிபீடம் இருக்கும். நந்தி தேவருக்கு முன் உள்ளது. தலைமைப் பலிபீடம். இங்கு நம் பாசங்களை எல்லாம் பலியிடுவதாகக் கருத்து. பலி–உணவு. இறைவனுக்கு நம் பற்றற்ற நிலையே நிவேதனம். 'ஆத்ம நிவேதனம்' என்பது இதுவே.

**கொடிமரம்**

வெற்றிக்கு அடையாளம் கொடி. இறைவன் தீமைகளிலிருந்து பக்தர் களைக் காப்பாற்றி வெற்றி கொள்கிறான் என்பதற்கு இக்கொடிமரம் சான்று.

அசுரர்களை அகற்றவும், சிவகணம், தேவர்கள் இவர்களை அழைக்கவும்–ஆலயத்தைக் காக்கவும் பக்தர்களைப் பாதுகாக்கவும் கொடிமரம் நிறுவப்படுகின்றது

கொடிமரத்தில்,

கொடிமரம்–சிவபெருமான்

கொடிக்கயிறு–திருவருட்சக்தி

கொடித்துணி–உயிர்

தருப்பைக் கயிறு– பாசம்

பாசத்தால் கட்டுண்ட உயிர் இறைவன் திருவருளால் சிவன் திருவடியை அடைதல் என்பதே கொடியேற்றுவதன் உட்கருத்து.

தலமரம்

முற்காலத்தில் மரங்களுக்குக் கீழேதான் இறைவனை அமைத்து வழிபட்டனர். முனிவர்களும் ஏதோ ஒரு மரத்தடியில் அமர்ந்தே தியானித்து இறையருள் பெற்றனர். எந்தெந்த மரங்களின் கீழிருந்து எந்தெந்த மந்திரங்களை உச்சரித்து எந்தெந்த தேவதைகளை வழிபட வேண்டும் என்று நூல்களில் கூறப்பட்டுள்ளன.

இதனால் ஒவ்வொரு கோவிலிலும் தலமரங்கள் உள்ளன. அவை 'ஸ்தல விருட்சம்' எனப்படும். சிறந்த தலங்களான தில்லை, மதுரை, காஞ்சி போன்றவை மரங்களின் பெயரில் அமைந்துள்ளது காணலாம்.

விமானம்

கருவறைக் கட்டிடத்திற்கு 'விமானம்' என்பது பெயர். மானம் என்றால் 'அளவை' என்பது பொருள். அளப்பதற்கு அரியது ஆதலால் இறைவனின் கருவறைக் கட்டிடம் 'விமானம்' எனப்பட்டது.

முதற்காலங்களில் கோபுரங்கள் கருவறையின் மேலேயே உயர்த்திக் கட்டப்பட்டிருந்தன.

சோழர் காலக் கோயில்கள் இவ்வமைப்பில் உள்ளவை. எனவே விமானத்தைத் 'தூலலிங்கம்' என்றும் கருவறையில் உள்ள இலிங்கத் திருமேனியைச் 'சூக்குமலிங்கம்' என்றும் கூறுவது வழக்கம்.

## கோயில் அமைப்பு

பெருங்கோயில்– மலையில்அமைந்த கோயில்

மாடக்கோயில் – தரைமட்டத்திற்கு மேலே யானை ஏறா வண்ணம் உள்ள கோயில்.

கரக்கோயில் – தேர் சக்கரம் போன்ற கோயில்.

ஞாழற்கோயில் – ஞாழல் மரத்தாலான கோயில்.

கொகுடிக்கோயில்– முல்லைக் கொடிகள் சூழ அமைந்த கோயில்.

இளங்கோயில் – பாலாலயம் (மூலக் கோயில் பழுது பார்க்கும் காலத்து வழிபடும் கோயில்)

மணிக்கோயில் – உருத்திராட்ச மணி மற்றும் உண்டையாக விமானம் பெற்ற கோயில்.

ஆலக்கோயில் – ஆலமரத்தடியில் அமைந்த கோயில்.

குடவரைக்கோயில்– மலையைக் குடைந்த கோயில்.

## சப்த விடங்கத் தலங்கள்

வீதிவிடங்கர் – திருவாரூர் அஜபா நடனம்

நகர விடங்கர் – திருநள்ளாறு உன்மத்த நடனம்


சுந்தர விடங்கர் – திருநாகைக் காரோணம் பாராவாரதரங்க நடனம்.

ஆதிவிடங்கர் – திருக்காறாயில் குக்குட நடனம்.

நீலவிடங்கர் – திருவாய்மூர் கமல நடனம்.

புவனி விடங்கர் – திருமறைக்காடு ஹம்ஸரித நடனம்.

அவனி விடங்கர் – திருக்கோளிலி பிருங்கநடனம்.



# அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில்

**திருவான்மியூர், சென்னை—600 041**

☎ 24410477, 24422688

**உடற்பிணி நீக்கி சுகம் தரும் திருத்தலம்**

## தல வரலாறு

*****

சென்னை திருவான்மியூர் அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில், தொண்டை நாட்டிலுள்ள பாடல்பெற்ற முப்பத்திரண்டு திருத்தலங்களில் 25ஆவது திருத்தலமாகவும், சுயம்பு லிங்க க்ஷேத்திரமாகவும், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று சிறப்புகளையும் தன்னகத்தே கொண்டு விளங்கி வருகிறது.

ஏழாம் நூற்றாண்டிலேயே இத்திருக்கோயிலுக்குத் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய சைவ சமய அருளாளர்கள் வருகைதந்து இங்கு எழுந்தருளியுள்ள இறைவனைப் போற்றிப் பாடியுள்ளார்கள். வான்மீகி முனிவர் வழிபட்டு இத்தலத்தில் முத்தி பெற்றதால், அவர் பெயரால் திருவான்மியூர் என இவ்வூர் அழைக்கப்படுகிறது.

## திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

**காலை 5.00 மணி — பகல் 12.00 மணி**

**மாலை 4.00 மணி— இரவு 9.00 மணி வரை**

## முக்கிய திருவிழாக்கள்

இத்திருக்கோயிலில் மாதாந்திர பிரதோஷ விழாவும், வைகாசியில் வசந்த உற்சவம், ஆடிப்பூரம், ஆவணியில் விநாயகர் சதுர்த்தி, பவித்ர உற்வம், புரட்டாசியில் நவராத்திரி, ஐப்பசியில் கந்தர்சஷ்டி, கார்த்திகை தீபம், மார்கழியில் ஆருத்ரா, மாசியில் சிவராத்திரி, பங்குனித் திருவிழா (பிரம்மோற்சவம்) ஆகியவை சிறப்பாக கொண்டாடப்பெறுகின்றன.

## தேவாசிரியன் திருமுறை மண்டபம்

இத்திருக்கோயிலில் உள்ள தேவாசிரியன் திருமுறை மண்டபத்தில் கடந்த 9 ஆண்டுகளாக 365 நாட்களும் சைவத் தமிழறிஞர் பெருமக்களைக் கொண்டு சமயச்சொற்பொழிவுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. மேலும், தேவாரம், திருவாசகம் முற்றோதல், சிறுவர் சிறுமியர்களுக்குத் திருமுறை இசைப்பயிற்சி அளித்தல், சமய குரவர் நால்வர்க்கு குருபூஜை விழா நடத்துதல் முதலானவை சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தினசரி இரவு 7 மணியளவில், நடைபெறும் சைவ சமய தோத்திர, சாத்திர நூல்களுக்கான சொற்பொழிவினைக் கேட்டுப் பயன்பெற வேண்டுகிறோம்.

## கோ சாலை

இத்திருக்கோயிலில் பசு மடம் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது. கோ சாலை பராமரிப்பிற்கு பக்தர்கள் நன்கொடை வழங்கி உதவிடுமாறு வேண்டுகிறோம்.

## தங்கரத உலா

வெள்ளிக்கிழமைதோறும் இரவு 7.00 மணிக்கு திருக்கோயில் உட்பிரகாரத்தில் தங்கரதம் இழுப்பதற்கான உபயக் கட்டணம் ரூ. 1500/— மேற்படி உபயக் கட்டணத்தைச் செலுத்தி தங்கள் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொள்ள பக்தர்களை வேண்டுகிறோம்.

## அன்னதான திட்டம்

இத்திருக்கோயிலில் நாள்தோறும் நண்பகல் வேளையில் 100 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. அன்னதான திட்டத்திற்கான ஒரு நாள் கட்டணம் ரூ. 1500/— 80ஜியின்படி வருமானவரி விலக்கு அளிக்கப்பெற்றுள்ளது. அன்பர்கள் அன்னதான திட்டத்தில் பங்கேற்க வேண்டுகிறோம்.

**நா. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,**
செயல்அலுவலர்

**ந. மாயகிருஷ்ணன்**
அறங்காவலர்க் குழுத் தலைவர்

**துரை கபிலன், கி. கோபாலகிருஷ்ணன், வே. சண்முகராஜ், மு. நாகமணி**
அறங்காவலர்கள்

# உலகம் உய்ய உதித்த உடையவர்




## பெ.ராமநாதபிள்ளை,

செயல் அலுவலர்,
அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில்,
ஆனைமலை,


இராமானுஜர் இவ்வண்ணம் திருநாராயணபுரத்தில் எழுந்தருளிய காலத்தில் எம்பெருமானுடைய ஆச்சாரியார் ஆகிய திருக்கோஷ்டி நம்பி, ஆளவந்தாரின் திருவடிகளை நினைத்தவாறே தனது 105 வது வயதில் தன் தேகத்தை நீக்கி திருநாடு அலங்கரித்தார். திருக்கோஷ்டி நம்பியின் மகனான தெற்காழ்வார் தன் தந்தைக்கு சாஸ்திர விதிப்படி தன் கடமைகளை செய்து முடித்தார். தனது கடைசி காலத்திலே திருக்கோஷ்டி நம்பி தன் சீடரிடம் தன்னிடம் சரணடைந்தவர்களை உயிரைக் கொடுத்தாவது காப்பாற்ற வேண்டும் என்றாராம். அதற்கு உதாரணமாக சக்ரவர்த்தி திருமகனார் ஸ்ரீ ராமரின் திருவுள்ளத்தை ஒரு புறா துன்பப்படுத்திய நிகழ்வினை கடைசி காலத்தில் சீடர்களுக்கு எடுத்துக் கூறினார்.

தியாக குணம் படைத்த ஆண்புறா ஒன்று தன் பெண்புறாவைக் கொன்ற வேடன் அந்த புறா தங்கியிருந்து மரத்தினடியே தஞ்சம் அடைந்தபோது அவன் குளிரைப் போக்கி பசியை நீக்க தீயை மூட்டி தானே நெருப்பில் விழுந்து அவன் குளிரையும் பசியையும் நீக்கியது. தன் பெண் புறாவை கொன்ற வேடன் என தெரிந்தும் அவன் தஞ்சம் அடைந்த காரணத்தினால் தானே அவனுக்கு உணவாகி தியாகம் செய்தது போல தன்னிடம் தஞ்சம் அடைந்த விபீஷணனை, தான் பாதுகாத்தாலும் அந்த புறா அளவிற்கு தியாகம் செய்யவில்லை என்று ஸ்ரீராமச்சந்திரபிரபு வருந்திய நிகழ்ச்சியினை கூறி நாமும் தம்மிடம் சரணடைந்தவாகளை கைவிடக்கூடாது என்று திருக்கோஷ்டி நம்பி சரணாகதி தத்துவத்தின் பெருமையினை கொண்ட நிறைந்த சிந்தனையாகவே இருந்தார் என்பது திருக்கோஷ்டி நம்பி அவர்களைப் பற்றிய செய்தியாகும். இந்த செய்தி எல்லாம் திருநாராயணபுரத்தில் வாழ்ந்திருந்த ராமானுஜருக்கு தெரிய வாய்ப்பில்லாமல் இருந்தது.

இந்நிலையில் ராமானுஜருடன் மாறாத அன்புடைய பக்தர்களாகிய அம்மங்கி அம்மாள், மாருதி ஆண்டான், சிறியாண்டான் என்ற மூவரும் குருநாதரை காணச் செல்கிறோம் என்று மகிழ்வுடனும், கூரத்தாழ்வாருக்கு ஏற்பட்ட துன்பத்தையும், பெரியநம்பி திருநாடு அலங்கரித்த செய்தியினையும் நெஞ்சில் சுமந்து கொண்டு, திருநாராயணபுரம் வந்து குருநாதர் ராமானுஜரின் திருவடியினைப் பணிந்து நின்றனர். தன்

சீடர்களாகிய அம்மங்கி அம்மாள், மாருதி ஆண்டான், சிறியாண்டான் மூலமாக, தம் குருநாதர் பெரியநம்பி திருநாடு அலங்கரித்த செய்தியையும், கூரத்தாழ்வார் கண்களை இழந்த செய்தியையும், தில்லையில் சித்திர கூடத்தில் பெருமாளின் திருமேனிக்கு ஏற்பட்ட அவமரியாதையையும் அறிந்து மிகவும் வருந்தி, கண்ணீர்விட்டு அழுத ராமானுஜர் "குற்றமற்ற குருநாதர்"என்று கூறி பூமியிலே விழுந்து அழுதார். என்னை தேடி வந்த அரச காவலர்களுடன் நான் செல்லாமல் பெரும் பாவத்தால் உம்மை காட்டிக் கொடுத்துவிட்டு இந்த அழியும் உடம்பை தாங்கி அடியேன் வந்தேனே என துடிதுடித்தார். பெருமை பொருந்திய திருவரங்கத்தில் இருக்கும் அரங்கன் நமக்கு இத்தகைய வாழ்வையா? தந்தார் என மனமுருகி தரையில் புரண்டார். குருமணியை, கிருமிகண்டன் கையிலே நான் காட்டிக் கொடுத்தேனே, அதுவே தாங்கள் பரமபதம் அடைய காரணமாக ஆயிற்றே என வருந்தினார்.

மேலும், பெருமை பொருந்திய கூரத்தாழ் வாரது திருக்கண்கள் போன செய்தியை எண்ணினார். சங்குசக்கரம் ஏந்தும் தடக் கையன், செங்கனிவாய் பெருமாளின் அடிய வர்களுக்கு இத்தகைய துன்பமா ஏற்பட வேண்டும் என வருந்தினார். மேலும், சித்திரகூடம் அழிந்தது எண்ணியும் மனமிரங்கி வருந்தினார். பின்னர் இவையெல் லாம் முன்வினைப்பயன் என்று மனம் தெளிந்து, அரசன் எவ்வாறு அழிந்தார் என வினவினார், உடனே அடியவர்கள் ராமானுஜரிடம் அரசன் வாய்புழுத்துச் செத்தான் என்றார். இதனை கேட்டு ஒருவாறு தெளிந்தார், இருப்பினும், பெரியநம்பிக்கும், கூரத்தாழ்வாருக்கும் ஏற்பட்ட துன்பம் முற்பிறவியிலேயே செய்த வினைப்பயன் என்றாலும், அரங்கன் அப்பாதகனாகிய சோழ மன்னனை கொன்று பகையை அழித்தார் என்றாலும், பெருமாள் மீது கோபங்கொண்டு, இனிமேல் நான் ஸ்ரீரங்கம் செல்லமாட்டேன் என தீர்மானித்து, திருநாராயணபுரத்தில் பொருந்திய செல்லப்பிள்ளைக்கு வேதங்கள் விதித்தபடி, திருவிழாக்கள் பலவும் நடத்தி, வானவர்கள் வாழ்த்தும் வகையில் திருநாராயணபுரத்தில் தங்கியிருந்தார். அவ்வாறு இருக்கும்பொழுது திருவரங்கத்துப்பெருமாள் யதிராஜராகிய உடையவர் எந்த நாட்டில் இருந்தாலும், எவர் பக்கத்தில் இருந்தாலும் அவர் தம் அடியார்களுடன் ஸ்ரீரங்கம் வருக என்னும் ஸ்ரீ முகத்தை பரிவுடன் எழுதி அனுப்பினார்.

அந்த நாளில் திருவரங்கத்
தம்மான் எதிகள் தனி
நாதர் எந்த நாட்டில் எவரருகில்
இருந்தா ரெனினும் தாம்விரைவில்
வந்து நம்மை காண்பதற்காய்
வருக தமர்களோடு மென்னப்
பந்தம் அறுக்கும் திருமுகத்தைப்
பரிவால் எழுதிப் புகவிடுத்தான்.

*–ஸ்ரீ ராமானுஜ வைபவம் பாடல் 895*

ஸ்ரீ முகத்தினை பெருமாளிடமிருந்து பெற்றுக்கொண்ட அடியவர்கள் உடையவரிடம் வந்து, திருவடியினை வணங்கி, ஐயா, அரிய வேதங்களின் தலைவன் ஸ்ரீமுகம் (கடிதம்) கொடுத்துள்ளார் என்றார்கள். ராமானுஜரும் அதனை தருவீராக என பெற்றுக்கொண்டு தலையிலே சுமந்து கொண்டு, வணங்கி, அதனை படித்தார், "நீ சீக்கிரத்தில் அடியார்களுடன் வருவாயாக" என்ற வார்த்தையை கண்டு விரைந்து எழுந்து திருநாராயண பெருமாளுக்கு, தொண்டு புரியும் 52 அடியார்களை அழைத்து, செல்லப் பிள்ளையாகிய எம் பெருமானினை ஆதரித்து வருவீர்களாக என அருளிச் செய்தார்.

இதனைக்கேட்ட 52 திருமாலடியார்களும் "அய்யா நாங்கள் உங்களை பிரிந்துவிட்டால், வைகுண்டம் எங்களுக்கு வெகுதூரம் என் றார்கள். உடனே உடையவர் இந்த செல்லப் பிள்ளையாக நம்பெருமாளுக்கு அடிமை செய்பவர்கள் தவறாது மோட்சத்தை அடைந்தே தீருவர் என திருவாய் மலர்ந்திருத் தார்.

இருப்பினும் 52 திருமாலடியார்கள் ராமானுஜரை பிரிய மனம் இல்லாமல் இருப்பதை அறிந்த ராமானுஜர், தம்மைபோல ஒரு விக்கிரகம் செய்து, அதில் தம்முடைய சக்தியை நிலைபெற செய்து, அதனை வழிபட்டு வாருங்கள் என அருளிச் செய்து,

திருநாராயணபுரத்து செல்லப்பிள்ளையாகிய பெருமாளிடம் விடைபெற்றுக் கொண்டு, தேனார் பூஞ்சோலை நிறைந்த ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார்

என்னத் தம்மை அக்கணத்தில்
ஏறி அருளப் பண்ணு வித்துத்
தன்னைத்தானே தாபித்துக்
தழுவித்தாம்தம் சக்தியெல்லாம்
உன்னற் கரிய திருஉருவில் தாபித்
தும்பர் தொழுதேத்த
மின்னைப் பொருவும் திருமேனிச்
செல்வப் பிள்ளை விடைகொடுப்ப

*–ஸ்ரீ ராமனுஜ வைபவம் பாடல் 900*

பெருமைமிக்க அடியாருடன் ஸ்ரீரங்கத்தின் உட்புகுந்து பெருமாளின் திருவடியை தொழுதார். அப்பொழுது பெருமாள் ராமானுஜரை நோக்கி பூமியில் பிறந்தவர்களிலே யாரும் அனுபவிக்காத பெரும் துன்பத்தை அனுபவித்தீரே என்று பெருமாள் சொல்லவும், ராமானுஜர் பெருமாளை நோக்கி விண்ணுலகம் நல்வாழ்வு பெற மண்ணுலகம் உயர்வு பெற மனிதர்கள் நல்வாழ்வு பெற துன்பம் நீங்கி இன்பம் பெற ஆதிநாத நீ தெற்கு நோக்கி திருப்பள்ளி கொண்டிருக்கும்போது எனக்கு வேறு துன்பம் வருமோ என்று, பெருமாள் திருவடியை வணங்கவும், பெருமாள் ராமானுஜரை நோக்கிக் கூரத்தாழ்வான் திருக்கண்கள் பறிபோயிருக்கிறான் நீ அவரிடம் சென்று ஆறுதல் கூறுவீராக என சொல்லவும் ராமானுஜரும் கூரத்தாழ்வார் வாழ்ந்துவரும் இடத்திற்குச் சென்று கூரத்தாழ்வாரைப் பார்த்து அன்பு மேலிட்டு விம்மி அழுது என் உயிர் போன்றவரே உமக்கா இந்த துன்பம் வரவேண்டும். பெரிய நம்பியும் இறந்துவிட்டாரே என்று வருந்தி அழுதார். அப்போது கூரத்தாழ்வார் உடையவரிடம் எனக்கு கண் போனதற்கு நான் தான் காரணமாக இருந்திருப்பேன் என்று சொல்லி தர்மவழியில் நிலைத்து நின்ற உத்தமமான திருமால் அடியார்கள் நெற்றியில் அணிந்தி ருக்கும் திருமண்ணைப் பார்த்து திருமண் கோணலாய் இருக்கிறதே என மனதிற்குள்ளே எண்ணி அபசரப் பட்டிருப் பேன் அதனால் தான் என் இரு கண்களும் பறிபோயிருக்கிறது என நான் நினைக்கிறேன் என்றாராம்.

எனக்கிது வருவ தேஎன்
உயிரனாய் என்றார் அழிவான்
மனத்திடைத் திருமண் கோணி
மற்றிவாரக் கிருந்த(து) என்னக்
கனத்த சீர்த் ததியர் தம்மில்
கருதி ஆங்(கு) ஒருவர் பாலும்
நினைத்திரா திருந்தே னோநான்
நெறியுறு நிலையாய் என்றான்.

*–ஸ்ரீ ராமனுஜ வைபவம் பாடல் 905*

பின்னர் ஒருவாறு மனம் தேறி ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்து வரும் காலத்தில் கிருமிகண்ட சோழன் மகனாகிய குலோத்துங்க சோழன் ராமானுஜரை சரணடைந்து தன்னை ஏற்றுக்கொள்ள வேண்டவும், ராமானுஜரும் அவரை ஏற்றுக்கொண்டு ஸ்ரீரங்கத்திலே நல்லமுறையில் நிர்வாகத்தினை முதலியாண் டானை ஏற்கும்படி செய்தார். பின்னர் தில்லைச் சித்திரக்கூடம் கிருமிகண்ட சோழனால் சிவன் கோயிலாக மாற்றப்பட்ட பொழுது அங்கிருந்த உற்சவப் பெருமாளை திருவேங்கட மலைக்கு எடுத்துச் சென்றதையும் அறிந்து திருவேங்கடமலை சென்று அங்கு கோவிந்தராஜப்பெருமாளை பிரதிஷ்டை செய்து காஞ்சீபுரம் வந்தார். உடன் சென்ற கூரத்தாழ்வாரைப் பார்த்து வேண்டிய வரங்களைத் தரும் வரதராஜப்பெருமாளை பாடி கண்பார்வை பெறும் என அன்புக் கட்டளையிட்டார். அக்கட்டளையை ஏற்று கூரத்தாழ்வாரும் "வரதராஜஸ்தவம்" என்ற நூலை இயற்றினார் பெருமாளும் அவருக்கு ஞானக்கண்ணைக் கொடுத்தார். மேலும் கூரத்தாழ்வாரின் கண்கள் போவதற்கு காரணமாக இருந்த கூரத்தாழ்வாரின் சீடனாக இருந்த நாலூரானையும் மன்னித் தார். இதனைக் கேள்விப்பட்ட கூரத்தாழ் வாரின் மனைவி யாகிய ஆண்டாள் குருநா தருக்கு துரோகம் செய்த நாலூரானும் மன்னிக்கப்பட்டான். பகவானாகிய கிருஷ் ணனை வரம்பில்லாமல் திட்டிய சிசுபாலனும் மன்னிக்கப்பட்டான். ஆனால் திருமால் அடியார்களாகிய பாகவதர்களுக்கு துரோகம் செய்தவர்கள் மன்னிக்கப்பட்டதாக சரித்திரமே இல்லையே என்றாராம்.

நீதிக் கதைகள்

# எதுவும் நடக்கலாம்!

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

ஒரு காடு. அந்தக் காட்டுலே ஒரு மரத்தின் கிளையில் இரண்டு புறாக்கள். அமைதியா உக்கார்ந்திருக்கு.

அந்த அமைதிக்கு வந்தது ஒரு கேடு. ஒரு வேடன் அந்த வழியா வந்தான். அவன் கையிலே வில்... தோள்லே அம்பு. வேட்டைக்கு ஏதாவது அகப்படுமா என்று பார்த்துக் கொண்டே வந்தான்.

இந்த ஜோடிப் புறா அவன் கண்ணிலே பட்டுவிட்டது. அவ்வளவுதான்.

சத்தம் போடாமே நெருங்கி வந்தான். அந்த மரத்துக்கு அடியிலே வந்து நின்றான். வில்லை எடுத்தான். அம்பை எடுத்தான். குறி தொடுத்தான்.

காற்றிலே இலைகள் அசையறதுனாலே அவனாலே சரியா குறி பார்க்க முடியலே. அடிக்கடி அசைகிற இலை கண்ணை மறைத்தது. புறா தற்செயலா கீழே குனிஞ்சி பார்த்தது. வேடன் குறிபார்க்கறது தெரிஞ்சிட்டுது. உடனே பக்கத்துலே இருந்து புறாகிட்டே சொல்லிச்சு:

"இதோ பார்... கீழே.. வேடன் குறி பார்க்கிறான்... உடனே கிளம்பு... பறந்து உயரே போயிடுவோம்!"

அந்த இன்னொரு புறா என்ன சொல்லிச்சு தெரியுமா?

"அதோ பார்... வானத்துலே ஒரு கழுகு நம்மையே குறி பார்த்துப் பறந்துகிட்டு இருக்கு.. இப்ப நாம மேலே பறந்து போனா அந்தக் கழுகுகிட்டே மாட்டிக்குவோம்!"

இரண்டு புறாவுக்கும் இரண்டு பக்கமும் ஆபத்து.

முதல் புறா தவிக்குது.

இரண்டாவது புறா அமைதியா உக்கார்ந்திருக்கு. "என்ன இப்படி அமைதியா உக்காந்திருக்கே.. இங்கேயே இருந்தா வேடனுக்கு ஆகாரம் ஆயிடுவோம். பறந்து போனா கழுகுக்கு இரையா ஆயிடுவோம். இப்ப என்ன பண்றது. ஒண்ணும் புரியலையே!"

"பதட்டப்படாதே... பொறுமையா இரு... எதுவும் நடக்கலாம். இதற்கு அப்புறமும் நாம பிழைக்கறதுக்கு வாய்ப்பு இருக்கிறதாகவே எனக்குத் தோணுது!"

நெருக்கடியான சூழ்நிலை. இப்ப என்ன நடந்தது தெரியுமா?

குறிபார்த்த இளைஞனுக்கு ஓர் ஆசை.. வந்தது. அதாவது ஒரே அம்பில் அந்த இரண்டு புறாவையும் வீழ்த்திவிட வேண்டும் என்கிற ஆசை.

அதனாலே என்ன பண்ணினான்...

கொஞ்சம் கவனமாக.. மிகவும் எச்சரிக்கையாகக் குறிபார்த்துக்கொண்டே கொஞ்சம் பின்னால் நகர்ந்தான்.

அப்போது அது நடந்தது.

கீழே இருந்த ஒரு பாம்புப் புற்றின்மீது காலை வைத்துவிட.. அங்கே இருந்த பாம்பு அவனைக் கடித்துவிட.. கையிலிருந்த அம்பு விடுபட அந்த அம்பு நேராகப் பாய்ந்து சென்று உயரே பறந்துகொண்டிருந்த கழுகின் உடம்பைப் பதம் பார்த்து.

கடைசியில் என்ன ஆயிற்று தெரியுமா?

வேடனும் கழுகும் தரையில் விழுந்து கிடக்கிறார்கள். அந்தப் புறாக்கள் அப்படியே உட்கார்ந்திருக்கின்றன.

சாகப்போகிறோம் என்று நினைத்த அந்தப் புறாக்கள் சந்தோஷமாக இருக்கின்றன. அவற்றைச் சாப்பிடப் போகிறோம் என்று நினைத்த வேடனும் கழுகும் செத்துக் கிடக்கிறார்கள்.

இப்படி ஒரு சுவையான கதையை நமது பெரியவர்கள் சொல்வதுண்டு. மகாபாரதத்தில் இந்தக் கதை இருப்பதாகச் சொல்கிறார்கள்.

இந்தக் கதையில் ஒரு நுட்பமான படிப்பினை இருக்கிறது. அதாவது – வாழ்க்கையில் நாம் கடைசிவரையில்

நம்பிக்கையோடு செயல் படவேண்டும். எதற்காகவும் நம்பிக்கை இழந்துவிடக்கூடாது. எதுவும் நடக்கலாம் என்கிற எண்ணம் வேண்டும்.

இந்தத் துணிச்சல் இல்லாதவர்கள்தாம் ஒரு சில வினாடிகளில் தற்கொலைக்குத் துணிந்து விடுகிறார்கள்.

* * *

இன்னொரு வேடிக்கை கதை உண்டு.

ஓர் அரசன், ஒருத்தனுக்கு மரண தண்டனை விதித்துவிடுகிறான்.

"அரசே எனக்கு மன்னிப்புக் கொடுங்கள்!" என்று கேட்கிறான் அவன்.

"என்னால் முடியாத காரியம் ஏதாவது உன்னால் செய்து காட்ட முடியுமானால் உனக்கு மன்னிப்பு வழங்கலாம்.. அப்படி ஏதாவது செய்ய முடியுமா உன்னால்!"

"முடியும் மன்னா! அரண்மனையில் இருக்கிற உங்கள் குதிரையை என்னால் பறக்க வைக்க முடியும்!"

"அப்படியா?"

"ஆமாம்!" ஆனால், அதற்கு ஒரு வருடம் அவகாசம் தேவைப்படும்!"

"அப்படியா! சரி.. பரவாயில்லை. உனக்கு வழங்கப்பட்ட இந்த தண்டனையை ஒரு வருட காலம் தள்ளி வைக்கிறேன்.

அடுத்த வருடம் இதே நாளில் இந்த குதிரை பறக்க வேண்டும். அப்படி நீ செய்துவிட்டால் உனக்கு விடுதலை!"

"சரி.. மகாராஜா!"

அவன் விடுவிக்கப்பட்டான்...

ஒரு நாள் அவனுடைய நண்பன் கேட்டான்: "ஏண்டா! குதிரையைப் பறக்க வைக்கிறேன்னு சொல்லிப் புட்டியே அது நடக்கிற காரியமா?"

அப்போது இவன் சொன்னானாம்:

"இதோ பாருப்பா! இன்னும் ஒரு வருசம் இருக்கு... எதுவும் நடக்கலாம்...

இன்னும் ஒரு வருசத்துக்கு இந்த மன்னர் இருப்பாராங்கறதும் நிச்சயமில்லை.

இன்னும் ஒரு வருசத்துக்கு நான் இருப்பேனாங்கறதும் நிச்சயமில்லை.

இன்னும் ஒரு வருசத்துக்கு இந்தக் குதிரை இருக்குமாங்கறதும் நிச்சயமில்லை....

ஆக... மன்னர் சாகலாம்.. அல்லது நான் சாகலாம்... அல்லது குதிரை சாகலாம்..

அல்லது... இன்னும் ஒரு வருசத்தில் இந்தக் குதிரை பறந்தாலும் பறக்கலாம்!

யாருக்குத் தெரியும்.

நம்பிக்கையோடு இருப்போம்!"




# புளியமர பொந்தில

பொதுவாக மரங்களை வழிபடுவது நம் ஸம்பிரதாயத்தில் நடைமுறையில் இருப்பதைப் பலர் அறிவோம். அதனால்தான் ஒவ்வொரு திருக்கோயிலிலும் ஏதாவது ஒரு மரம் அல்லது மரங்களும் ஸ்தல விருட்சங்களாக வழிபடப்படுகின்றன. ஆலமரம், அரசமரம், மகிழமரம், வன்னிமரம், புன்னை மரம் என்று பல மரங்கள் தல விருட்சமாக பல தலங்களில் அமைந்துள்ளன. புளியமரம் ஓர் ஆழ்வார் ஸ்தானத்தில் வணங்கப்படும் மரமாக விளங்கிவருவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆழ்வார் திருநகரி என்ற நம்மாழ்வாரின் அவதாரத்தல திருக்கோயிலில் உள்ள புளியமரமே திருப்புளியாழ்வார் என்ற மகிமைப் பெயருடன் விளங்கிவருகிறது. இப்புளிய மரமே ஒரு காலத்தில் நம்மாழ்வார் யோகத்தில் வீற்றிருக்கும் இடமாக (இருப்பிடம்) அமைந்திருந்த பெருமை பெற்றது. இந்தப் புளியமரம் ஆதிசேஷனின் அம்ஸம் என்ற பெருமையும் கொண்டதாகும். இதன் புராணப் பின்னணி என்னவென்று பார்ப்போமா?

இராம சந்திரமூர்த்திக்கு பட்டாபிஷேகம் முடிந்து எல்லாரும் அயோத்தி மாநகரில் அமைதியுடன் வாழ்ந்து வருகிறார்கள். சக்கரவர்த்தித் திருமகனின் சர்க்கரையின் இனிப்பு நிறைந்த சாம்ராஜ்யம். அதில் சிறிது கசப்பு கலந்துவிட்டது போல் ஓர் நிகழ்ச்சி. இராமபிரான் தன்னடிச் சோதிக்குச் செல்ல சில தினங்களே இருந்தன. தர்மராஜாவான எமதர்மன் இராம பிரானைக் காணவந்தார். அயோத்தியர் கோமானும் தென்புலத் தரசனும் தனிமையாய் அளவளாவிக் கொண்டிருந்தனர். அப்போது இடையில் யாரும் உள்ளே வராமல் பார்த்துக் கொள்ள இலக்குவனுக்கு அண்ணலின் ஆணை. அந்த சமயம் பார்த்து கோபத்தின் மொத்த உருவமான தூர்வாச முனிவர் வந்து இராபிரானைச் சந்திக்க வேண்டுமெனக் கேட்டார். முனிவரின் கோபத்தை எதிர்கொள்ள முடியாத இலக்குவன் அவரை உள்ளே செல்ல அனுமதித்தான். நிலைமையைப் புரிந்து கொண்ட இராமபிரான் முனிவரை வரவேற்று தக்க உபசாரங்களைச் செய்தார். இருந்தாலும் அண்ணலின் எண்ணத்திலும் கோப அலை ஏற்பட்டுவிட்டது. எமதர்ம ராஜனும் முனிவரும் சென்றபின் இராமன் இலக்குவனை நோக்கி "எனது ஆணையை மீறிவிட்ட நீ ஒரு அசையாப் பொருளாய் ஆகக்கடவாய்" என்று சாபமிட்டார். இலக்குவன் இதை எதிர்பார்க்கவில்லை. இராமனைச் சரணடைந்து தனக்கு இட்ட சாபத்திற்கு விமோசனம் கேட்டான். இராமனும் "நீ பூ உலகில் ஓர் புளியமரமாகக் கிடப்பாயாக. நான் இப்பிறவியில் நிரபராதியும் கர்ப்பிணியுமான சீதையைக் காட்டிற்கு அனுப்பினேன். அந்த வினை என்னை விடாது. அதற்கு விமோசனமாய் நான் அசையாப்பொருளாயிருக்கும் உன் அருகில் ஓர் பிரம்மச்சாரியாய் ஐம்புலன்களையும் வென்று ஞானமுத்திரை தரித்து சடகோபன் என்ற திரு நாமத்துடன் அந்தப் பொந்தினில் வாஸம் செய்யப்போகிறேன். அப்போது காசிபமுனிவர் "காரி" என்ற பெயருடன் பூவுலகில் பிறப்பார். அவருடைய மனைவி அதிதி "உடையநங்கை" யாக அவதரிக்க அத்திவ்ய தம்பதிகளுக்கு குழந்தையாக அவதரித்து பன்னிரண்டாம் நாள் புளியமரமாய் கிடக்கும் உன் பொந்தில் புகுந்து வசித்து யோக நித்திரையிலமர்ந்து நாட்டு நலனுக்காக நான்மறைகளைத் தமிழ் பாசுரங்களாக உலகுக்கு வழங்கப்போகிறேன்" என்று கூறினார். மேலும் ஓர் கணையாழியை

# ல் வாழ்ந்த புனிதர்

இலக்குவனிடம் கொடுத்து இதைக் கையில் மாட்டிக்கொண்டு பூவுலகில் சஞ்சரிக்கும்போது எந்த இடத்தில் கணையாழி கை நழுவி விழுகிறதோ அந்த இடத்தில் நீ புளியமரமாக மாறிவிடுவாய் என்றார். அதன்படியே இலக்குவன் கணையாழி கை நழுவிய இடமே ஆழ்வார் திருநகரி ஆதிப்பிரான் திருக்கோயிலருகேயாகும். அங்கு அவன் புளியமரமானான். அந்தப் புளியமரம் இலக்குவனைப் போலவே இருந்தது. இருந்து வருகிறது என்றும் சொல்லலாம். எப்படி பதினான்கு ஆண்டு கால வன வாசத்தில் பகவான் ஸ்ரீ இராம பிரானை ஊண் உறக்கமின்றி காத்த இளையபெருமாளைப் போல இன்றும் இந்த புளியமரம் உறங்காப் புளியாக உள்ளது. பூ பூக்கும் காய் காக்கும். ஆனால் பழுக்காது. இப்புளிய மரப்பொந்தில்தான் இராமபிரான் அம்ஸமாக நம்மாழ்வார் சுமார் 16 ஆண்டுகள் யோக நித்திரையில் இருந்தார். அவருடைய மகிமையை அறிந்த மதுரகவியாழ்வார் மூலம் நான் மறைகளின் சாரங்களைத் தமிழில் வெளிப் படுத்தினார். அவற்றை மதுரகவிகள் ஓலைச்சுவடிகளில் பட்டோலை படுத்தினார். பிற்காலத்தில் நாதமுனிகள் வாயிலாக



அப்பிரபந்தங்களை நாம் பெற்றோம். இராமனே நம்மாழ்வாராக அவதரித்தபோதும் அவர் சிறந்த கிருஷ்ண பக்தராகவே

*"கண்ணன் கழலினை நண்ணும்*
*மன முடையாராக,*
*உண்ணும் சோறும், பருகும் நீரும்*
*தின்னும் வெற்றிலையும் எல்லாமே*
*அவருக்கு கண்ணன்.*
*கீதையை உபதேசித்த கண்ணன் கீதாசார்யன் ஆனான்.*
*இராமபிரானோ வேதம் தமிழ் செய்த மாறன்"*

என்று புகழ் பெற்றான்.

புளியமரமான இலக்குவனுக்கு நம்மால் முடிந்த அளவிற்கு தாமிரபரணியிலிருந்து நீர் கொண்டு வந்து ஊற்றினால் சர்ப்ப தோஷங்கள் விலகும். நன்மக்கட் பேறு அமையும், மேலும் நம்மாழ்வாருக்கு "நீராஞ்சனம்" சமர்ப்பித்தாலும் நன்மக்கட்பேற்றை அடையலாம்.

நம்மாழ்வாரின் அவதார உத்ஸவம் 18.5.2010 இல் ஆரம்பித்து 27-05-2010வரை நடைபெறவுள்ளது. 22-5-2010 இல் நவதிருப்பதி பெருமான்களின் கருட ஸேவையும் நடக்கவுள்ளது. இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஆழ்வார் திருநகரி சென்று ஆழ்வாரின் திருவிழாக்களையும் அவருக்கு கருடசேவையில் காட்சிதரும் நவதிருப்பதி எம்பெருமான்களையும் திருப்புளியாழ்வாரையும் தரிசித்து நலன் பெறலாம்.

**எம்.என்.சீனிவாசன்**

# திலகவதியார்

**சைவ** சமயம் போற்றும் பெண்டிர்களுள் காரைக்கால் அம்மையார், திலகவதியார், மங்கையர்க்கரசியார் ஆகிய மூவரும் முக்கியமானவர்கள்.

நடுநாடு என்றழைக்கப்படும் கடலூர் மாவட்டத்திலுள்ள திருவாமூர் எனும் ஊரில் வேளாளர் மரபில், புகழனார் – மாதினியார் தம்பதியர்க்கு மகளாய்த் தோன்றியவர் திலகவதியார். அவர் தம்பியார் மருள்நீக்கியார்.

மணமாகாதிருந்தும் கூட, பெற்றோரால் கணவராக நிச்சயிக்கப் பெற்றார் என்ற ஒரே காரணத்தால், தமக்கு நிச்சயிக்கப் பெற்ற கலிப்பகையார் போரில் இறந்த செய்தி கேட்டவுடன், உயிர் துறக்கத் துணிந்தார் திலகவதியார். பின், தன் தம்பியார் பொருட்டு பெருங்கருணையினால் உயிர் தாங்கி, திருவதிகையில் மடமொன்று அமைத்து, தவ வாழ்க்கை மேற்கொண்டு, நாளும் சிவ நினைவில் வாழ்ந்து வந்தார்.

திருவதிகைப் பெருமான் திருக்கோயிலில் திருவலகிடுதல், திருமெழுகிடுதல், தான் அமைத்திருந்த நந்தவனத்திலிருந்து மலர் கொய்து மாலை தொடுத்து இறைவனுக்குச் சாத்துதல் முதலான திருப்பணிகளை நாள்தோறும் செய்து வந்தார்.

தம்பியார் உலக நிலையாமை, ஞானத்தேடல் காரணமாய் புறச் சமயமான சமணம் சார்ந்து தருமசேனர் ஆனார். திலகவதியார் இறைவனிடம் தன் தம்பியரை உய்விக்க வேண்ட, தருமசேனர் கொடிய சூலை நோய்க்குள்ளாகிப் பெரிதும் துன்புற்று வருந்தினார்.

திலகவதியார், திருவதிகைப் பெருமானிடம் இறைஞ்சி வேண்ட, சிவனருளால் தம்பியார் சூலை நோய் நீங்கப் பெற்று, சைவம் சார்ந்து திருநாவுக்கரசர் – அப்பர் சுவாமியாகி, சைவ சமய குரவர் நால்வருள் மூத்தவரானார் என்பது வரலாறு.

திலகவதியார், சைவத்துக்குக் கொடுத்த அருட்கொடையே அப்பர் சுவாமிகள் எனலாம்.

–தென்னம்பட்டு ஏகாம்பரம்


இந்தியாவிலேயே கயிலாய யாத்திரையை மட்டுமே 12 ஆண்டுகளாக, யாரும் தர இயலாத குறைவான கட்டணத்தில் 15 நாட்களிலும் அதிக சலுகையுடன் நவீன வசதியோடு அனைவரையும் கிரிவலம் அழைத்துச் செல்லும் அனுபவம் மிக்க நிறுவனம்

**கைலாஷ்–மானஸரோவர்–முக்திநாத்**

**மே 16 ஜூன் 15, ஜூலை 14, ஆகஸ்ட் 13, செப்டம்பர் 12, 2010**

புனிதத்துவம் வாய்ந்த கயிலாயம் மற்றும் மானஸரோவரின் எழுச்சி மிக்க சக்தியை நீங்கள் உணரக்கூடிய அரிய வாய்ப்புடன் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று மானஸரோவரில் புனித நீராடி, பிரதோஷத்தில் கிரிவலம் வர உலகத்தரம் வாய்ந்த நேபாளில் உள்ள **SHRESTHA HOLIDAYS** உடன் இணைந்து ஒவ்வொரு குழுவிலும் சத்சங்கங்கள் மற்றும் பஜன், தியானத்துடன் புறப்படுகிறோம்.

**ரயில் மூலம் 22 நாட்கள், விமானம் மூலம் 15 நாட்கள், ஹெலிகாப்டர் மூலம் 10 நாட்கள்**

காட்மண்டில் இருந்து (சூப்பர் டீலக்ஸ் வசதியுடன்) டயோட்டா கார் (4500 மாடல் புது வண்டி) மூலம் கயிலாயம் சென்று தரிசித்து பின் காட்மண்டு வருவதற்கு 15 நாட்கள் ஆகும். அனைத்து கட்டணம் உட்பட **ரூ.61,900/-** மட்டுமே (வேறு எந்த கட்டணமும் கிடையாது)

சென்னையிலிருந்து இரயில் மூலம் காட்மண்டு சென்று, அங்கிருந்து டயோட்டா கார் (4500 மாடல் புது வண்டி) மூலம் கயிலாயம் சென்று தரிசித்து, பின் இரயில் மூலம் சென்னை வருவதற்கு 22 நாட்கள் ஆகும். இரயில் கட்டணம் உட்பட (சூப்பர் டீலக்ஸ் வசதியுடன்) **ரூ.64,900/-** மட்டுமே (வேறு எந்த கட்டணமும் கிடையாது)

சென்னையிலிருந்து டெல்லி வழியாக விமானத்தில் காட்மண்டு சென்று, அங்கிருந்து டயோட்டா கார் மூலம் கயிலாயம் சென்று தரிசித்து, பின் விமானம் மூலம் சென்னை வருவதற்கு 15 நாட்கள் ஆகும். அனைத்து கட்டணம் உட்பட **ரூ.61,900/-** + விமான கட்டணம்

காட்மண்டில் இருந்து (சூப்பர் டீலக்ஸ் வசதியுடன்) ஹெலிகாப்டர் மூலம் கயிலாயம் சென்று தரிசித்து பின் காட்மாண்டு வருவதற்கு 10 நாட்கள் ஆகும். அனைத்து கட்டணம் உட்பட **ரூ.1,40,000 /-** மட்டுமே. (வேறு எந்த கட்டணமும் கிடையாது)


**கைலாஷ் உள்பரிக்கிரமா (Inner kora - all three), 20 நாட்கள், புறப்படும் நாள்: ஆகஸ்ட் 18**

சென்னையிலிருந்து டெல்லி வழியாக விமானத்தில் காட்மண்டு சென்று, அங்கிருந்து மனக்கமனா, போக்ரா, ஜோம்சோம் வழியாக முக்திநாத் சென்று தரிசனம் செய்துவிட்டு மீண்டும் காட்மாண்டு அடைந்து சென்னை வர 5 நாட்கள் ஆகும். அனைத்து கட்டணம் உட்பட ரூ.12,900/- + விமான கட்டணம்

சிவாச்சாரியார்கள், திருமுறை ஓதுபவர்கள், டாக்டர்கள் மற்றும் குருப்பாக வருபவர்களுக்கு கட்டணத்தில் சலுகை. பாஸ்போர்ட் அவசியம். இல்லாதவர்களுக்கு ஏற்பாடு செய்து தரப்படும்.

♦ காட்மண்டுவில் ஸ்டார் ஹோட்டலில் தங்கும் வசதி ♦ மானஸரோவர், கயிலாயம், முக்திநாத்தில் சாஸ்திரிகளைக் கொண்டு அவரவர்களுக்கு சிறப்பு பூஜை செய்யப்படும் ♦ ஒவ்வொரு ஜீப்பிலும் ஆக்சிஜன், மாஸ்க் வசதியுடன் 4 அன்பர்கள் மட்டுமே ♦ கயிலை பயணம் வீடியோ எடுக்கப்படும் ♦ யாத்திரை காலம் முழுவதும் மினரல் குடிநீருடன் ஆசாரமான பிராமணாள் உணவு ♦ மருத்துவ வசதி ♦ குளிருக்கு ஏற்ற பாதுகாப்பான தங்குமிடங்கள் (Mud Houses) ♦ சென்னையிலிருந்து கயிலாயம் சென்று கயிலைநாதனை தரிசித்து ஊர் திரும்பி வரும் வரை நாங்கள் கூடவே இருந்து சிறப்பான சேவை செய்கிறோம்.

கயிலாய, முக்திநாத் பயணத்திற்கு தேவையான அனைத்து உபகரணங்களுடனும் பாதுகாப்புடனும் தரமான, சுகாதாரமான தமிழக உணவு வகைகளை 3 வேளையும் வழங்கி ஒவ்வொரு குழுவிலும் டாக்டர் மற்றும் சிவாச்சாரியார் துணையுடன் அனைத்து வயதினரையும் (age no limit) அழைத்துச் செல்லும் அனுபவம் மிக்க ஒரே நிறுவனம்.




**ஸ்ரீ அன்னபூரணி யாத்ரா சர்வீஸ்**

**Kailash - Manasarovar & Mukthinath Yatra Entirely Organised by Brahmins**


63, நடுத்தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004

**Cell : 97911 11979 / 94446 76757 (24 Hrs)**



**SPECIAL CARE FOR SENIOR CITIZENS ENJOY POURNAMI (FULLMOON NIGHT) AT MANASAROVER**

# மெய்ஞ்ஞானம்



தென்னம்பட்டு ஏகாம்பரம்

**சா**ந்தோக்கிய உபநிடதத்தில் ஸ்ரீநாரத முனிவர் ஆத்மஞானம் பெற்ற வரலாறு கூறப்படுகிறது.

ஸ்ரீ நாரத முனிவர், சநத்குமாரர் எனும் மகரிஷியை நாடியடைந்து, பணிவுடன் வணங்கி, தனக்கு ஆத்மஞானம் உபதேசிக்குமாறு வேண்டுகிறார்.

'ஆத்ம ஞானம் பிறகு உபதேசிப்போம்; உமக்கு இதுவரை என்ன தெரியுமோ அதைச் சொல்லும்' எனக் கேட்டார் சநத்குமாரர்.

அதற்கு நாரதர், 'ஐயனே! ரிக் வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம், இதிகாச புராணங்கள், தர்மங்கள், மந்திரங்கள், கணிதம், ஜோதிடம், கால அளவு, வியாகரணம், காவியம், அலங்காரம், பூதநூல், ஆயுள் நூல், வான சாஸ்திரம், நாட்டியம், சங்கீதம் இன்னும் எத்தனையோ கலைகள் தெரிந்திருக்கிறேன்' என்றார்.

'நீர் அறிந்த ஆயகலை அறுபத்தி நான்கினுக்கும் மேலான ஒரு கலை உளது. அதுவே பிரம்ம வித்தையெனும் ஆத்ம ஞானம். அது உமக்குத் தெரியுமா?, என வினவினார் சனத்குமாரர்.

'ஆத்ம ஞானம் தெரியாது ஐயனே! அதை அறிந்தவனே சோகமாகிய பிறப்பு, இறப்பு கடந்து அமரத்துவம் எனும் முத்தி அடைய முடியுமென பெரியோர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். ஆகவே அந்த மெய்ஞ்ஞானத்தை எனக்கு உபதேசிக்க வேண்டும்' என நாரதர் பணிந்து கேட்க, சனத்குமாரர் 'நீர் இதுவரை படித்தவை எல்லாம் வெறும் பெயர்களைப் பற்றியவையே. பெயரைவிட மேலானது ஒன்று உண்டு. அதுவே மெய்ப்பொருள் -மெய்ஞ் ஞானம்' என உபதேசிக்கத் தொடங்கினார்.

வேதங்களில் அதாவது உபநிஷதங்களிலும், வித்தை என்பதை அபரா என்றும் பரா என்றும் இரண்டு பிரிவுகளாக முனிவர்கள் பகுத்துள்ளனர்.

நாரத முனிவர், தனக்குத் தெரிந்தவை எனக் கூறியதெல்லாம் அபார ஞானம்; சநத்குமாரர் எனும் மெய்ஞ்ஞானியை அடுத்து அவர் பெற்ற ஆத்ம ஞானமே பரா வித்தையாகும்.

வேதங்களிலும், உபநிடதங்களிலும் பிரம்ம வித்தை, வான் வித்தை, ஆகாய வித்தை, பரகாய வித்தை என்றெல்லாம்

பேசப்படுவதையே, தமிழ் மறைகளில் நம் சித்தர் முத்தர்கள் சாகாக் கல்வியென்றும், சாகாக் கலை என்றும் மெய்க்கல்வியென்றும் கூறுகின்றனர். 'சாகாத கல்வியே கல்வி' என்பார் வடலூர் வள்ளற்பெருமானார்.

'ரிக் வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம், உச்சரிப்பு, சடங்குகள், இலக்கணம், அகராதி, யாப்பு, வானவியல், ஜோதிடம் போன்றவை சாதாரண அறிவைச் சேர்ந்தவையே. அழிவற்றவராகிய இறைவன், எந்த அறிவால் அடையப் படுகிறாரோ அந்த உயர்ந்த அறிவே மெய்யறிவு' என்கிறது முண்டகோப நிடதம்.

ஆக இறைவனை அறிகின்ற அறிவு மட்டுமே வித்யை (ஞானம்) என்று நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன.

மற்ற அனைத்தும் அது விஞ்ஞானம், கலை என்று எதுவானாலும் ஏன் வேதங்களைப் படித்தல் போன்றவை கூட அவித்யை (சாதாரண அறிவு) என்றே சொல்லப்படுகிறது.

மெய்ஞ்ஞானம் என்பது உண்மையில் நம்மையே நாம் அறிந்து கொள்ளுதலாகும். ஆம், நம்மை நாம் பார்க்கும் தெய்வக் கண்ணாடியாகும். பிற விஷயஞானம் எல்லாம் நம்மைப் பண்டிதன் ஆக்கலாம். நடமாடும் பல்கலைக் கழகமாக்கலாம். ஆனால் அவை ஒரு போதும் தன்னையறிய உதவாது

'தன்னை அறிவது அறிவாம் அஃதன்றிப்

பின்னையறிவது பேயறிவாகுமே'

என்கிறது திருமந்திரம்

உலகத்தைப் பற்றிய அறிவு, மரணத்தோடு உங்களை விட்டுப் பிரியும்; உங்களைப் பற்றிய மெய்ஞ்ஞான அறிவோ, மரணத்திற்குப் பின்னரும் உங்களுக்குத் துணையாக வரும்' என்கிறார் நபிகள் நாயகம்.

எங்கும் பரவி நிற்கும் பரம்பொருள் –பிரணவப் பொருள், தனக்குள் ஆன்மாவாய் இருப்பதையும், தான் அதுவே என்பதையும் அனுபூதியாய் அறிதலே மெய்ஞ்ஞானமாகும்.

மெய்யான ஞானமென்பது சாதியிலும், வெளிவேடத்திலும், வேதம் ஓதுவதிலும் நிச்சயமாக இல்லை என்றே சாஸ்திரங்கள் கூறுகின்றன.

'வேதத்தைத் திரும்பத் திரும்ப ஓதி இந்த ஆன்மாவை அடைய முடியாது. படிப்பதால் உண்டாகும் அறிவைக் கொண்டு ஆத்மதரிசனம் அடைய முடியாது. பண்டிதர்கள் சொல்லக் கேட்டும் அடைய முடியாது' என்கிறது கடோபநிடதம்.

நம் உள்ளத்தில் தேவஞானம் ஆதியில் படைக்கப்பெற்றிருக்கிறது. அப்படி படைக்கப்பெற்றிராவிட்டால், நமக்கு ஞான தேட்டம் ஏற்படாது. நமக்குத் தானே ஞானம். மிருகங்களுக்கு அது கிடையாதே.

இந்த மெய்ஞ்ஞானத்தைப் பெறவே மனிதனுக்கு இந்த மானிடத் தேகமும், வயதும் தந்தது. அதுவும் இத்தகைய மெய்க்கல்வியை உணர அறிவும், வயதும் இளமையாக உள்ள காலத்தே தேடி அடைந்து பெற வேண்டும். தப்பாமல் முப்பது வயதிற்குள் பெற வேண்டும் என்றது இந்த மெய்க் கல்வியைத்தான்.

ஆயினும், எத்தனை காலமானாலும் தன் முயற்சியினால் மட்டுமே ஞானத்தை அடையவே முடியாது. அடைந்ததாக வரலாறும் கிடையாது.

மனைவி, மக்கள், செல்வம், வீடு, மனை, புகழ், ஊண், உறக்கம் முதலிய யாவற்றையும் துறந்தாலும் ஒரு மெய்க்குருபிரானின் துணையில்லை என்றால் இந்த மெய்ஞ்ஞானம் கிட்டவே கிட்டாது.

ஞானம் என்பது உபன்னியாசம் அல்ல. சொற்பொழிவு ஆற்றுவதோ அல்லது கேட்பதோ அல்ல. சும்மா பொழுது போக்கும் விஷயமல்ல.

கோயில் தரிசனம், தீர்த்த யாத்திரை, வேதம் ஓதுதல், சாஸ்திரங்கள் படித்தல் என்பதெல்லாம் மெய்ஞ்ஞான மாளிகையின் படிக்கட்டுகளே. அவையே ஞானமாகாது.

ஞானம் என்பது உண்மையில் நாம் யார் என்பதைக் கண்டு கொள்வதைத் தவிர வேறென்ன?

உண்மையான மெய்ஞ்ஞானம் கிட்டியவுடன், புறவழிபாடுகள், ஆசார அனுஷ்டானங்கள், அனைத்தும் கழன்று விடும். நவரத்தினக் கற்களைக் கண்டு கொண்டவன், ஒரு போதும் சாதாரணக் கற்களை நாடிச் செல்வானா?

விஷய ஞானத்தின் மூலம் ஆன்மாவை ஒருபோதும் தெரிந்து கொள்ள முடியாது என்பதை எப்போது உணர்கிறோமோ, அப்போதே ஞான வாசல் கதவு திறக்கப் பெறுகிறது.

ஆனாலும் அந்த மெய்ஞ்ஞான வாசல் இடுக்கமும், வழி நெருக்கமாகவும் இருக்கிறது. அது எப்போதும் ஒற்றையடிப் பாதையாகவே இருக்கிறது. அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் எக்காலத்தும் வெகுசிலராகவே இருக்கிறார்கள்.

ஒருவன் தன்னை அறியும்போது, அவனது அகவிருள் முற்றிலும் மறைந்து போய் விடுகிறது. அறிவு வடிவமாக-ஜோதி வடிவமாக ஆகிவிடுகிறான். மண்ணில் வாழும்போதே பிரணவ தேகியாகி விடுகிறான்.

இந்த மெய்ஞ்ஞான அனுபவத்தையே வடலூர் வள்ளற்பெருமானார் 'அருட்பெருஞ்ஜோதி ஆனேன் என்று அறையப்பா முரசு' என்கிறார்கள்.

'அழிவற்ற பரம்பொருளே பிரம்மம். அதன் இயல்பை அறிதலே ஆத்மஞானம்' என்கிறது பகவத்கீதை.

இந்த ஆத்ம ஞானம் எப்போதும் நம் அருகில், நம்மைப் போலவே மானிட ரூபத்தில்தான் இருக்கிறது. ஆனால் நாமோ, அதை வேத நூல்களிலும், கோயில்களிலும், ஆசார அனுஷ்டானங்களிலும் தேடிக் கொண்டிருக்கிறோம்.

'ஆசார்யவான் புருஷோ வேத!' என்கிறது சாந்தோக்கிய உபநிடதம். ஆசார்யனைப் பெற்ற புருஷனே ஞானோதயம் பெறுகிறான் என்கிறது அவ் உபநிஷதம்.

'கற்பனவும் இனி அமையும்' என மாணிக்கவாசகர் பிரான் அருளியவாறு, எல்லாப் பொய்களையும், மூடத்தனங்களையும், கற்றலையும் கைவிட்ட பிறகே, இந்த மெய்க்கல்வி தொடங்குகிறது. அது கிட்டியபின், படித்தவை எல்லாம் சுமைகளாகவும், குப்பைக் கூளங்களாகவும் தெரியவரும்.

ஞான நூல்களைப் பற்றிய பாண்டியத்யம், நம்முடைய அறியாமையை மறைக்க உதவுமே தவிர, அது ஒருபோதும் மெய்ஞ்ஞானத்தை அளித்ததில்லை.

மெய்ப்பொருள், எழுத்தில் இல்லை; அது எழுதா மறை. எழுத்தில் இருப்பினும் மறை பொருளாகவே வைக்கப் பெற்றிருக்கிறது. நம்மால் ஒரு போதும் அறிந்து கொள்ள முடியாது.

'ஏட்டிலுள்ள பாஷைகள்

எல்லாம் கரைத்திடினும்

காட்டுங் குருவில்லாமல்

காண முடியாதண்ணே'

என்பார் ஸ்ரீ மகரிஷி மார்க்கநாத ஆண்டகை.

வாழையடி வாழையென வரும் குருபரம்பரையில், மனுக் கோலம் தாங்கி வரும் அவதாரப் புருஷர்கள் நடமாடும் காலத்தே மெய்ஞ்ஞானம் ஒளிவீசிப் பிரகாசிக்கிறது.

வான்பழித்து இம்மண் புகுந்து, மானிடத்தை ஆட்கொள்ள வரும் மகான்களால் ஏதோ ஒரு காலத்தில், ஏதோ ஒரு பூமியில் இந்த மெய்ஞ்ஞானம் கொண்டு வரப் பெறுகிறது. அப்போது அவர்களைச் சார்ந்த மக்களுக்குத்தான் இந்த மெய்ப்பொருள் கிட்டுகிறது.

ஞானம் என்பது அபூர்வமானது. எளிதில் கிட்டாதது.

'இத்தகைய மெய்ஞ்ஞானம் யோகிகளின் பொக்கிஷம் போன்றது. புத்தியையும், முத்தியையும் அளிக்க வல்லது,

தகுதியுடையவர்க்கன்றி வெளிப்படையாகப் பேசுதற்கரியது. பிரம்மசாரியாகவும், புலனடக்கம் உள்ளவனாகவும், குருபக்தி உடையவனாகவும் இருப்பவனுக்கே இதை உபதேசிக்கலாம்' என்கிறது ஹம்சோபநிடதம்.

இந்த ஞான முதலை ஒரு ஜீவன் முத்தர் அல்லாது வேறு எவர் கொடுப்பினும் அதனால் பிரயோசனமில்லை.

'அருளினதோர் மெய்ஞ்ஞான
அருள் பெற்றோர்க்குக்
குருமுகமாய்க் கொடுப்பதல்லால்
மற்றோர் கையில்
கொடுத்தவர்க்கும் பெற்றவர்க்கும்
சாபம் சாபம்'

என்கிறார் அகத்திய மாமுனிவர்.

இந்த மெய்க்கல்வி, உலகக் காரியங்களைப் போல பகிரங்கமாக இல்லை. அந்தரங்கத்து ரகசியமாக இருக்கிறது. தாயும், பிள்ளையுமாகப் பழகுகிற பான்மையில் இந்த மெய்ஞ்ஞானம் அருளப் பெறுகிறது.

'மகத்தான ரகசியமடா ஞான மார்க்கம்' என்றார் அகத்திய மாமுனிவர்.

ஞானம் என்பது தன் முயற்சியால் அடையவும் முடியாது. தன் நினைவிற்கும், ஊகங்களுக்கும் எட்டப்படாததாக உள்ளது அது.

அறிவே ரூபமெடுத்து மானிடச் சட்டை தரித்து, மெய்ஞ்ஞானியாக வருங்காலத்தில் அவர்களைத் தேடிச் சரணடைந்து, யதார்த்த உள்ளத்தோடு பற்றிக்கொண்டால், இந்த மெய்ஞ்ஞானம் நம் கைவசமாகும். பெரியோர்களின் வேதத் தொனிக்கு, நம் செவிப் புலனைத் தந்து அவர்கள் காட்டும் மெய்ந்நெறியில் நடந்தால் ஆத்மஞானம் நம்முள்ளே வளர்ந்து கற்பக விருட்சமாகும்.

ஆனாலும், பெரியோர்கள் தங்களிடமுள்ள தெய்வ முதலாகிய பிரணவத்தை, மெய்ப்பொருளை மக்களுக்கு கட்டாயப்படுத்தித் தருவதில்லை.

தானே விரும்பி வந்து இணங்கிப் பழகி பணிந்து கேட்டு காத்துக் கிடக்கிறவர்களுக்கு மட்டுமே இந்த மெய்ப்பொருள் வழங்கப் பெறுகிறது.

'சப்தப் பிரம்ம உபாசனையில் தேறியவன் பரப்பிரம்மத்தை அடைகிறான்' என்கிறது அமிருத பிந்து உபநிடதம்.

ஆன்மாவிற்கான அமிர்த வருஷிப்பை வழங்க ரூபத்தில் வருகின்ற ஞான சூரியனாம் அவதாரப் புருஷர்களே சப்தப் பிரம்மமாகும்.

இத்தகைய 'ஆத்ம ஞானத்தை தத்துவம் கடந்த ஞானிகள் உனக்கு உபதேசம் செய்வார்கள். நீ அவர்களுக்குப் பணிந்து வணங்கியும், அடிக்கடி உன் காது கொடுத்துக் கேட்டும், அவர்களுக்குச் சேவை செய்தும், ஆத்ம ஞானத்தைப் பற்றி அறிவாயாக' என்கிறது பகவத்கீதை.

இத்தகைய 'ஞானம் அறிந்தோர்க்கு நமனில்லை' என்கிறது திருவள்ளுவர் ஞானம்.

'நன்றாக வளர்ந்த நெருப்பானது எப்படி விறகுகளை எரித்து சாம்பலாக்கி விடுமோ, அப்படியே ஞானம் என்ற அக்கினியானது எல்லா பாவங்களையும் சாம்பலாக்கி விடும்' என்கிறது பகவத் கீதை.

அத்தகைய மெய்ஞ்ஞானம்-மனுமுளை தோன்றிய நாள் முதல் சன்மார்க்க காலம் வரை இருந்த அந்த பிரம்ம ஞானம், இப்போதும் இங்கே இருக்கிறது. நமக்கு வேண்டியது விழிப்புணர்வு மட்டுமே. விழித்த அக்கணமே, ஞானம் ரூபத்தில் உங்கள் முன் நிற்பதைக் காண்பீர்கள்.


| | |
|---|---|
| சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் | **ப.ரா. சம்பத், இ.ஆ.ப.,** ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, தமிழ்நாடு அரசு நுங்கம்பாக்கம் சென்னை – 600 034. தொலைபேசி எண்: 28334811/12/13 |
| ஆசிரியர் | **கவிஞர். தென்னம்பட்டு ஏகாம்பரம், எம்,ஏ.,** |
| அச்சிடுவோர் | சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட்., சென்னை–86 தொலைபேசி: 23450920/28117575 |



பழனி அருள்மிகு தண்டாயுதசாமி திருக்கோயிலில் 2.5.2010 அன்று இரண்டாவது கம்பி வட ஊர்தி அடிக்கல் நாட்டுவிழா (ம) சிறுவர்பூங்கா பள்ளிக்கூட கட்டடங்கள் பக்தர்கள் வசதிக்காக புதிய கட்டடங்கள் திறப்புவிழா நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன், மாண்புமிகு வருவாய்த்துறை (ம) வீட்டுவசதித் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி, அரசு தலைமைக் கொறடா ஆர். சக்கரபாணி, திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.வி.சித்தன், இந்து சமயஅறநிலையத்துறை ஆணையர் திரு.ப.ரா.சம்பத் இ.ஆ.ப., திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் திரு. மா.வள்ளலார் இ.ஆ.ப., திருக்கோயில் அறங்காவலர்குழுத்தலைவர் திரு.ச.வே. பாலசுப்ரமணியன், திரு. கார்த்தி ப.சிதம்ரம் உள்ளிட்ட அறங்காவலர்கள், இணை ஆணையர் / செயல் அலுவலர் திரு. தி.ராஜமாணிக்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



பதிவுஎண்: TN/CH(C)/305/09-11/WPP NO. 451/09-11

# அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில்

வடபழநி சென்னை–26, தொலைபேசி : 044 – 2483 6903



## வைகாசிவிசாகம் விடையாற்றி பெருந்திருவிழா அழைப்பிதழ்

பேரன்புடையீர்,

தொண்டை வளநாட்டில், தருமமிகு சென்னை வடபழனியில், வேண்டுவோர்க்கு வேண்டும் வரங்களை அளிக்கும் கலியுக வரதனாகவும், கண்கண்ட தெய்வமாகவும் எழுந்தருளி, கருணை மழைபொழியும் வள்ளலாக காட்சி தருபவர் **அருள்மிகு வடபழனி ஆண்டவர்.** கி.பி. 17ஆம் நூற்றாண்டில் **அருள்திரு அண்ணாசாமி நாயக்கர் - அருள்திரு ரத்தினசாமி செட்டியார் - அருள்திரு பாக்கியலிங்க தம்பிரான்** ஆகியோரின் தவவலிமையால் அருள்சுரக்கும் கந்த கடவுள், நம் செம்மொழிக்கடவுள், குறைவற்ற செல்வமும், கல்வியும், வாழ்வும் கொடுக்கும் அன்பு நிறையப் பெற்ற

## அருள்மிகு வடபழநி ஆண்டவருக்கு

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி தமிழ்த்திங்கள் 13–ம் நாள். (27–05–2010) முதல் வைகாசி மாதம் 24–ம் நாள் (07–06–2010) முடிய, **வைகாசி விசாகப் பெருந்திருவிழா** நடைபெற உள்ளது, 28.05.2010 அன்று இரவு புஷ்ப பல்லக்கு நடைபெற்று 29–05–2010 முதல் 07–06–2010 முடிய **விடையாற்றி திருவிழா** நடைபெற உள்ளது. விழாக் காலங்களில் சிறப்பு நாதஸ்வர இசையும் தேவாரத்திருப்புகழ் இன்னிசையும். வேதபாராயணமும் நடைபெற உள்ளன, அனைவரும் விழாவில் கலந்து கொண்டு திருவருள் பெற அன்புடன் வேண்டுகின்றோம்,

**அன்புடன்**

**த. காவேரி எம்.எல்.,**
**துணை ஆணையர் / செயல் அலுவலர்,**

**டாக்டர் சீர்காழி கோ. சிவசிதம்பரம் எம்.டி.**
**அறங்காவலர் குழுத்தலைவர்**

**செ. கண்ணப்பன் Ex, Mc., எம். பழநி Ex, Mc., கண்மணிசீனிவாசன், ஆ. மணிமாறன்**
**அறங்காவலர்கள்**